ரிஜிஸ்டர் நெ. 1279. போஸ்ட் பாக்ஸ் நெ. 346. டெலிபோன் நெ. 2583

DRAVIDAN

திராவிடன்

நாடோறும் வெளிவருவது

ஆசிரியர்-திரு. சனகசங்கர கண்ணப்பர்.

மலர்—12] சென்னை பிரபவ-ஆு பங்குனி-மீ 3உ 1928-ஆு மார்ச்சு-மீ 15உ வியாழக்கிழமை [இதழ்—61

மகளிர் கோட்டம்.

இந்திய மகளிர்

அவர்களுக்கு வேண்டுவதென்ன?

(திரு நிறை செல்வி. ஆர். கிருஷ்ணு பாய். பீ. ஏ எல். டி. எழுதுவது)

இந்திய நாடே இப்பொழுது ஒரு பெரிய மாறுதல் அடைந்து வருகிறதென்று தான் சொல்லவேண்டும், ஏனெனில் இப்பொழுது தான். தேசிய வாதிகளும் அரசியல் வாதிகளும் ஒருவர்மேல் ஒருவர் வீழ்ந்து மகளிர் குறையைத் தீர்க்க முன் வந்திருக்கின்றனர்; பெண் கல்வியை யாதரிப்ப தற்கென்றே ஒரு சிலர் கங்கணங் கட்டிக் கொண்டிருக்கின்றனர். ஆயினும் மகளிருக்கு எத்தகைய கல்வி அவசியமென்பதைப்பற்றிய ஒரு முடிவு மட்டும் இன்னும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. சமீபகால நிகழ்ச்சிகளை யுற்று நோக்கியவர்களுக்கு பெண்களுக்கு அளிக்கப்படுங் கல்வி முறை தற்கால முறைக்கு முற்றிலும் மாறுபட்டதாக இருக்க வேண்டு மென்று நம்புபவர்கள் சிலர் இருக்கின்றனரென்பது விளங்கியிருக்கும். ஆனால் பெண்களில் ஒரு பகுதியினர் அவ்வாறு கல்வி முறையில் வேற்றுமை காட்டுதல்பெண்களைச் சமூக நிலையில் தாழ்மை படுத்துவதாகும் என்று கருது கின்றனர். கல்வி என்பது தான் என்ன? சிலர் தாம் கொ [illegible]

கப் புறக்கணிக்கப்பட்டு வந்திருக்கின்றமையால் தற்போது பொலிவிழந்திருக்கின்றனரென்பது உண்மையே; ஒன்றின் மேலொன்றாக அடித்துவந்த அந்நிய மக்களது படையெடுப்பினால் நாடுபொறி கலங்கியிருப்பது உண்மையே; ஆயினும் இவ்வளவு தடுமாற்றத்திலும், பெரும்புயலிலும் இந்தியமகளிரது அடிப்படையான ஒப்பற்ற தனிப்பெருமை மட்டும் ஒரு சிறிதும் அசையாதும் அழிவுறாதும் நிற்கிறது. அதற்கு உரிபகாரணம் என்னவென்று பார்ப்போமானால் அது நமது மகளிர்எல்லா துறைகளிலும்ஆண்களைப் போல நடந்துகொள்ள வேண்டுமென்ற அவாக்கொண்டு அவர்களுடன் போட்டி போடமுன்வராமையேயாகும். தற்போது சிறந்துவிளங்கும் சுயேச்சை சம உரிமை என்ற விழுமிய கருத்துகளின் உண்மைப் பொருளுணராது வீண் பகட்டுகளை மட்டும் பிடித்துக் கொண்டு நாட்டின் பிற்கால நன்மையும் முன்னேற்றமும் தங்கள் கைகளில்தான் இருக்கின்றன என்பதை நம் மகளிர் மறந்துவிடுவார்களானால் அது பெரிதும் வருந்தத் தக்கதாகும். இதனால் தம் குடும்ப விருத்தியைத்தவிர மகளிர் வேறு வேலைகளிற் புகுதல்கூடாது என்று நான் சொல்ல முன்வரவில்லை. உலகத்திலுள்ள ஒவ்வொன்றும் மகளிர்க்கு உரியதுதான்; ஆயினும் நான் கூறுவதென்னவென்றால் மகளிர் தலையிடும் எக்காரியத்திலும் தனது பெண்மையைமட்டும் மறந்துவிடக்கூடாது, ஒரு இயந்திரத்தைப்போல் பகுத்தறிவைப் பறிகொடுத்துவிடக்கூடாது என்பதுதான். இத்துறையில் நாம் மற்றெந்த நாட்டையும் பார்த்து அதன்முறையைப் பின்பற்ற வேண்டியதில்லை. நாம் பண்டைய நாள்களிலேயே நனி நாகரிகம் சிறந்து விளங்கியவர்கள்; ஆகவே அந்நாகரிகப்பெருமைக்கு இழிவு வாராதவாறு நடந்துகொள்வதே நமது கடமையாகும். நமது பிற்காலப் பெருமை நமது தற்கால இல்வாழ்க்கையிலேதான் கால் கொண்டிருக்கிறது. எனவே "பாரதமாதா"வின் சந்ததிகளைச் செவ்வனே வளர்த்துக்கல்வி பயிற்றி வரவேண்டிய ஒப்பற்ற உரிமை இந்திய மகளிருக்கே உரியதாகும். இதனால் ஒரு அரசியல்வாதியின் தொண்டைவிட ஒரு பெண்மணியின்தொண்டே சிறந்து விளங்குவதாகும். என்பது வெளிப்படை "ஒவ்வொரு பெண்மணியும் சமையல் வேலையைச் செவ்வையாகக் கற்றுக்கொள்ளவேண்டும், வீட்டு காரியங்களைச் சரிவரப் பார்த்து வருவதைத் தவிர வேறே பெரிய விஷயங்களில் தலையிடக் கூடாது என்பது இதன் கருத்தல்ல" எனப் புகழ் மிகு திரு இரவீந்திரநாத் தாகூரே ஓரிடத்தில் கூறியிருக்கிறார். நாம் வேண்டுவதென்ன வென்றால் திரு. ஸரோஜினி நாயுடுவைப் போன்றும் திரு. முத்துலட்சுமி ரெட்டியைப் போன்றும் அரசியல் வாதிகள் கிளம்பி இழந்த உரிமைகளை மீண்டும் பெறப் போராட வேண்டும் என்பதே; ஆனால் அதே சமயத்தில் எல்லாப் பெண்மணிகளும் வீட்டு விஷயங்களை யொதுக்கி விட்டு நீதி மன்றத்தில் வாதம் புரியவும் சட்ட சபைகளில் அங்கத்தினராகவும் போய்விட எண்ணக்கூடாது. பெண்மணிகள் அரசியல் வாதிகளாகக் கூடாது என்று கூற நான் முன்வரவில்லை யென்பது இதனால் விளங்கும். நான் வேண்டுவதெல்லாம் வீடுகளிலும் பொது மக்களிடையும் புரிய வேண்டிய சமூகத் தொண்டைப் புறக்கணித்து விட்டு அதிக தொகையினராகப் பெண்கள் அரசியல் துறையில் இறங்கிவிடக் கூடாது என்பதுதான். இதையேதான் திரு ஸரோஜினி நாயுடு சென்ற தேசியச் சமூக மகாநாட்டில் 'சுயேச்சையைப் பற்றியெழுகின்ற புதுக் கருத்துகள் இந்தியப்பெண்மணிகளின் போற்றத்தக்க சிறப்பியல்புகளைக் கெடுத்து விடுகின்றன' என்று மிக அழகாக எடுத்துக்கூறியிருக்கி[illegible]ர். சாவித்திரிகளும், சீதைகளும், [illegible] களுமாகப் பெண்மக்கள் [illegible] புகழ் பெற்று விளங்கினதை நாம் [illegible] டு சரிதத்தில் காண விழைகின்றோம். பெண் மக்களது பெருஞ் சிறப்பு தலைமுறை தலைமுறையாக வந்து கொண்டிருந்தது இங்கிலீஷ் கல்வி தோன்றியதனால் தான் ஒருவாறு தடைபட்டது என்று சொல்லவேண்டும்; ஏனெனில் இங்கிலீஷ் கல்விபாரம்பத்தில் மனிதனை ஒரு புதுவித அறிவியல் துறையிற்செலுத்தவே பெண்மணிகள் அத்துறை செல்ல வியலாது வாளா வீட்டிற்றங்கினர்: சித்தூர் பத்மினி தேவியும், மீராபாய் என்ற புலவர் திலகமும், தாராபாய் என்ற போர்மகளும் இன்றும் நமது நாட்டில் சிறந்து விளங்குகின்றனர். நமது இந்திய சரிதத்தில் அவர்கள் உயர்வானத் தொளிர் நட்சத்திரங்களை யொத்துத் திகழ்பவர்களன்றோ? ஆகவே பெண் மக்களது இழந்த உரிமைகளுக்குப் போராட வீரர்கள் முன் வருகிற இக்காலத்தில், பெண்மணிகள் ஆண்மக்களைவிட எவ்விதத்திலும் அறிவாற்றலிற் குறைந்தவர்களல்ல வென்று பல்வகையிலும் மெய்ப்பிக்கப்படுகிற இக்காலத்தில் பெண்மக்களுக்கு அவர் தம்பெருமைக்கேற்றதாக எத்தகைய கல்வியைப்போதிக்கவேண்டுமென்று நாம் கவனிக்க வேண்டாமா?

பெண் கல்வி முறை அவர்களைத்தினசரி வாழ்க்கையில் நல்லறிவு தெருட்டுவதாக இருக்கவேண்டும். சுகாதாரம். இடர்ப்பட்டோர்க்குச் சிகிச்சை, வீட்டு நிர்வாகம், நோயுற்றோர்க்குப் புரியும்தொண்டு, குழந்தைகளை வளர்த்தல், முதலிய தினசரி வாழ்க்கைக்கு இன்றியமையாத விஷயங்கள் ஒவ்வொரு பெண்ணுக்கும் ஆரம்பக்கல்வியோடு போதித்து வரப்படுதல் வேண்டும். ஆண்மக்களுக்கேற்பட்ட கல்வியிலேயே உள்ளுறையும்உயர்ந்த உணர்ச்சிகளை யெழுப்பக்கூடியதான பகுதி குறைவுற்றுக் காணப்படுகிறது. "சித்திரம் வரையும் பாடங்களும்,இசையோடமைந்த பாடல்களும் ஒரே விதமாக சுவைபற்றதாக இருக்கின்றன" எனப்பெண்கள் அடிக்கடி கூறுவதைக் கேட்டிருக்கிறோம். ஆகவே இத்துறைகளில் பெரியசீர் திருத்தம் வேண்டும். சித்திரத்தையும் இன்னிசையையும் போற்றி வணங்குவது தேசபக்தன் மட்டுமேயன்றி ஒவ்வொருவரது முதற்கடமையுமாகும். ஏனெனில் அவற்றால் ஒழுக்க முடைமையும், அடக்கமுடைமையும், அவாவின்மையும், விழுமிய கருத்துகளும், இழிகுணங்களில் வெறுப்பும் உண்டாகின்றன. பல்லாண்டுகளாக நம்மனோரது இத்தகைய உயிர்ப்பண்புகள் அறிவியற்றுறையிலும், கல்வித்துறையிலுமுண்டாய புதுவிதக் கருத்துகளால் மங்கிக்கிடக்கின்றன. அவற்றை யிப்பொழுது யெழுப்பிவிடுதல் வேண்டும்.

ஆகவே இன்னிசையிலும், சித்திரப் பழக்கத்திலும் ஏற்பட்டுள்ள எல்லாத் தடைகளையும் நீக்கி விடுங்கள். அவைகள் சந்தேகமில்லாமல் பாரதமாதாவின்கல்விக் குறைவை நிறைத்துவிடும், நமது நாட்டிலுள்ள எழிலுறும் இயற்கைவனப்பும், ஓவியமும், இன்னிசையும் போதிக்க வல்ல உயரறிவைத் தடுத்து பெண்மக்களையும் ஆண்மக்களையும் கண்ணிருந்தும் குருடராகவும், காதிருந்தும் செவிடராகவும், வைத்து வரும் போலிக்கல்விமுறையை ஒழிப்போமாக.

இந்திய நாடு இக்காலம் வேண்டுவது தாய்மார்களே; இல்லறம் புரியும் நற்றாய்மார்களே; தம் வயிற்றிடைப் பிறக்கும் மக்களுக்கு வாழ்க்கையின் உயர் நோக்கங்களையும், சமூக வாழ்வின் உயர் கருத்துகளையும் போதிக்க வல்ல நற்றாய்மார்களே! இக்குறை நிறைவுற்றால்இரவீந்திரநாத புலவர் கூறுவது போன்று

"ஆண் பெண்ணெனிய விரு பாலர்க்கும் இந்நாடேமண்ணிடைத்துறக்கமாகும்;
அன்பும் உயர் தொண்டும், தியாகமுமாகிய தெய்வீகக் குணங்கள் திகழும் உலகமாக மாறும்"

— "பார்ப்பனரல்லாத இளைஞன்" —

இமயமுதல்—
—குமரிவரை

டில்லி பலகலைக்கழக ஸ்பெஷல் பட்டமளிப்பு விழா நேற்று முன்தினம் மாலையில் டில்லியில் நடைபெற்றது. அதுகாலை மேன்மைதங்கிய அரசப்பிரதிநிதி, சர். முகம்மது ஹபிபுல்லா, ராவ்பகதூர் மோதிசாகர் முதலியோர்களுக்கு கௌரவப் பட்டங்கள் வழங்கப்பட்டன.

* * *

பெங்களூரில் சென்ற வெள்ளிக்கிழமை இரவு நேபாளம் கர்னல் ராஜாஜெய பிருதிவ்சிங் பகதூர் அவர்களின் தலைமையின் கீழ் பரோபகாரச்சங்கம்ஒன்று ஸ்தாபிக்கப்பட்டது. பிறகுகர்னல் பிருதிவ்சிங்கும் மற்றும் பலரும் இத்தகைய சங்கங்களினால் ஏற்படும் பலனைப்பற்றி பேசினார்கள். அதன்பிறகு சங்கத்திற்கு காரியாலய உத்தியோகஸ்தர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். நேபாளராஜா பகதூர் அவர்களே அந்தசங்கத்தின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றார்.

* * *

வங்காளத்திலே ஜமீன்தார்கள் கொடுமைபெறுக்க முடியவில்லை என்றும் அது விஷயமாய் சர்க்கார் சரியான நடவடிக்கை எடுத்து குடி ஜனங்களுக்கு உதவி செயயா விட்டால் பெரிய கிளர்ச்சி நேரிட்டு ஜமீன்தார்களுக்கும். சர்க்காருக்குமே கெடுதிவிளையு மென்றும் வங்காள சட்டசபையில் திரு. ஜே. எல். பானர்ஜி கூறினார்.

* * *

ஜனங்களின் உரிமைத்திட்டம். தொழிலாளர் விவசாயிகள் உரிமை. இந்திய சமஸ்தான நிலைமை. தேசிய பாஷை, சட்டசபை. ஓட்டுரிமை முதலிய விஷயங்களைப்பற்றி சுயராஜ்ய திட்ட மகாநாட்டில் பல எட்டுத் தீர்மானங்கள் நிறைவேற்றி பொது ஜன அபிப்பிராயத்துக்கு வெளியிட்டிருக்கிறார்கள்.

* * *

மிஸஸ்பெஸன்ட்சுயராஜ்யத்திட்டமகாநாட்டு நடவடிக்கைகளைப்பற்றி வெளியிட்டிருக்கிற ஒரு அறிக்கையிலே தனது "காமன் வெல்த் ஆப் இந்தியா" மசோதாவைப்பற்றி நீண்ட விளம்பரம் செய்திருக்கிறார்.

மத்திய மாகாண சட்டசபையிலே மந்திரிகள் சம்பளத்தைப் பற்றிய விவாதத்தின்போது காங்கிரஸ் வாதியான திரு. கோல் மந்திரிகள் சம்பளத்தை இரண்டு ரூபாயாக குறைத்துவிட வேண்டுமென்று மிகவும் தயாளமாக ஓர் தீர்மானம் கொண்டுவந்தார். 9பேர் அதை ஆதரித்தும் 43பேர் ஆட்சேபித்ததால் அந்த தீர்மானம் நிறைவேறவில்லை.

* * *

சென்ற ஒரு வாரமாய் காமன் பண்டிகைக்காக கான்பூரில் அடைபட்டிருந்த கடைகள் இம்மாதம் 13ந் தேதி முதல் திறக்கப் பட்டிருக்கின்றன.

* * *

இரங்கூன் டிராம்வே மானேஜரை அவதூறு செய்ததாக "தண்டுலோ" என்ற பர்மியவாரப் பத்திரிகையின் ஆசிரியருக்கும், மானேஜருக்கும் தலைக்கு ரூ 200 அபராதம் விதிக்கப்பட்டது.

* * *

சுயராஜ்ய திட்ட மகாநாட்டில் பல திறப்பட்ட அபிப்பிராய பேதமுள்ள பல கட்சிக்காரரும் ஒன்று சேர்ந்து பல தீர்மானங்களைச் செய்திருக்கிறார்கள். அவைகளின் படிநடந்தால்நமதுகோரிக்கை ஈடேறுமென்று நம்பலாம் என்று டாக்டர் அன்சாரி கூறுகிறார்.

* * *

பம்பாயில் முறிந்து போன இந்தியன் பெனின் சுலர் ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனி மானேஜிங் டைக்டர்மூன்று லட்ச ரூபாய் வரையில் கம்பனிப் பணத்தை அபகரித்துக் கொண்டதாக அவர் மீது வாரண்ட் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

* * *

மைசூர் சன்னபட்டினத்தில் பட்டுபூச்சிகைத்தொழில் மகாநாடு ஒன்று நடந்தது பட்டுபூச்சி அபிவிருத்திக்கான பல விஷயங்கள் விவாதிக்கப்பட்டன.

* * *

மேன்மை தங்கிய பர்மா கவர்னர் சென்ற வெள்ளிக்கிழமை மைக்கத்தீவாவுக்கு விஜயம் செய்தார். அப்போது அவருக்கு முனிசிபல் சபை ஜில்லாசபை பத்திரங்கள் வாசித்துக் கொடுத்தன.

* * *

இம்மாதம் 27, 28ந் தேதிகளில் சர் லல்லுபாய் சமால்தாஸ் அவர்களது தலைமையின்கீழ் பீஹார் ஒரிசா கோவாப்பரேட்டிவ் பிடரேஷன் காங்கிரஸ் பாட்னாவில் நடைபெறும். இந்த காங்கிரசை மேன்மை தங்கிய கவர்னர் திறந்துவைப்பார்.

* * *

பர்மா கவர்னர் நேற்று முன்தினம் மாந்தலே வந்துசேர்ந்தார். இவருக்கு முனிசிபல்சபை பத்திரம் வாசித்துக்கொடுத்தது. பிறகு அவர் ஊர்வலமாக கவர்னர் வீட்டுக்குச் சென்றார். சென்ற திங்கட்கிழமை கவர்னர் ஒரு சந்நியாசியால் வரவேற்கப்பட்டார்.

* * *

நேற்று முன்தினம் இரவு கனம் எஸ், இ. பீயர்ஸ் அவர்கள் 6 மாதம் லீவில் இங்கிலாந்துக்குச் செல்ல பெங்களூரை விட்டுக் கிளம்பினர். கனம் திரு. எல். எம். கிரம்பு அவர்கள் மைசூர் ரெசிடெண்டு வேலையையும் குடகு சீப்கமிஷ்னர் வேலையையும் ஒப்புக்கொண்டார்.

* * *

ஜலக்வி ஜில்லா ரிஸ்ரா சணல் ஆலையின் தொழிலாளர்களின் இருகட்சிகளுக்கும் நேற்று முன்தினம் இரவு கைகலந்த சண்டை நடந்ததால் 3 இந்துக்களும் 2 முகம்மதியர்களும் காயமடைந்திருக்கின்றனர். அந்தமில் பகுதி போலீசாரால் பாதுகாக்கப்பட்டு வருகின்றது.

வெளிநாட்டுச் செய்தி.

விமானசேதம்.

விமானி கின்க்ட் மரணகாரணம்.

ரக்பி, மார், 13

லெப்டினன்ட் கின்கிட்டின் விமானம் கடலுக்குள் பாய்ந்த விபத்தைப்பற்றி பல காரணங்கள் சொல்லப்படுகிறது. ஒரு காரணமென்னவெனில் லெப்டினன்ட் கின்கிட் 300 மைல் வேகத்தில் பிரயாணம் செய்துகொண்டிருந்ததாகவும் அப்போ சூரிய ஒளி கண்ணிலடித்ததினால் விநாடி நேரம் அவர் கவனம் மாறி அதனால் இந்த விபத்து ஏற்பட்டிருக்க வேண்டுமென்று சொல்லப்படுகிறது. இன்னொரு காரணம் அந்த விமானம் இருமுறை தண்ணீரில் இறங்கி எறினதால் அதன் பின் பக்கத்தில்சேதமுண்டாகி பிறகு இறங்க யத்தனித்த போது கோளாறு ஏற்பட்டு விமானம் கைக்கடங்காமல் பாய்ந்திருக்க வேண்டும் என்றும் சொல்லப்படுகிறது அதுவுமன்றி என்ஜின் மிகவும் வேகமாய் நடந்து கொண்டிருந்தால் அதிலிருந்த வெளிப்பட்ட புகையினால் லெப்டினென்ட் கின்கிட் மயங்கிப் போயிருக்கக்கூடு மென்றும் சொல்லப்படுகிறது.

அந்த விமானம் கின்கிட் பிணத்துடன் கடலுக்குள்ளிருந்து நேற்றுவெளியே எடுக்கப்பட்டது. இன்றுஆகாயப்படைஇலாக்கா அந்த ஆபத்து நேரிட்டதற்கு காரணமென்னவென்று கண்டு பிடிப்பதற்காக ஆராய்ச்சி செய்யப் போகிறார்கள்.

இன்னொரு விபத்து

லண்டன் மார் 13—

வெனிசில் நடக்கும் ஷினிடர்கப் பந்தயத்துக்கு போயிருந்த பிரிட்டிஷ் பிரதிநிதியான லெப்டினன்ட் கர்னல் பிரிஸ்டோவின் விமானத்துக்கும் இது போலவே விபத்து நேரிட்டதாகத் தெரிகிறது.

ருஷிய-ஜெர்மன் உறவு

ஜெர்மன் என்ஜினியர்களை கைது செய்ததகராறு

பெர்லின், மார், 13—

ஜெர்மன் என்ஜினியர்களை ருஷிய போலிசார் கைது செய்ததைப்பற்றி மாஸ்கோவிலிருக்கும் ஜெர்மன் ஸ்தானதிபதி திரு. சிக்கரினை கலந்து பேசினதில் அவர், அந்த என்ஜினியர்களைக் கைதுசெய்ததைப்பற்றி விசாரித்து ஜெர்மனிக்கு முடிவு சொல்லுவதாக கூறியிருக்கிறார். ஜீனிவாவிலிருந்து இப்போதுதான் திரும்பிவந்திருக்கிற டாக்டர் ஸ்டிரஸ்மன் இது விஷயமாய் கவனம் செலுத்துவாரென்று எதிர்பார்க்கப் படுகிறது.

இதுவிஷயமாகருஷியாவுடன் உறவை முறித்துவிட வேண்டுமென்று பெர்லின் பத்திரிகைகள் கூறுகின்றன.

ஸ்திரி விமானி மரணம்

நயிரோபியில் நடந்த விபத்து.

லண்டன், மார், 14

திரு. ஜான் இவான்ஸ் பிர்க்கார்பரியின் மனைவி மிஸஸ் கார்பரி கிழக்கு ஆபிரிக்கா நயிரோபியில் டட்லி கவி என்ற வாலிபனுக்கு விமானம் செலுத்த படித்துக் கொடுத்துக் கொண்டிருக்கையில் விமானம் கீழே விழுந்து அவர்கள் இருவரும் கொல்லப்பட்டனர்.

திரு. கார்பரிக்கு ஒரு காப்பி தோட்டமிருக்கிறது. புருஷனும் மனைவியும் விமானம் பிரயாணத்தில் அதிக கவனம் செலுத்தி வந்தனர். அவர்களிடம் நாலு விமானங்கள் இருந்தன மிஸஸ் கார்பரி மடிந்த விபத்து அவள் புருஷன் முன்னிலையிலேயே நடந்தது.

லாஸ் ஏன்ஜலஸ் விபத்து.

800 பேர் காணோம்.

நியு யார்க் மார் 14

அழகிய சான்பிரான்ஸிஸ்கோ பள்ளத்தாக்குச் சமீபத்தில் நடந்த வெள்ள விபத்தினால் மண்ணும் கல்லும் சகதியும் நிறைந்த காடாகி விட்டது. கலிபோர்னியாவிலுள்ள பல சங்கங்களையும் சேர்ந்த தொண்டர்கள் அந்தவெள்ளப் பிரவாகத்தினால் நிறைந்திருக்கும் மணலுக்குள் புதைந்து கிடக்கும் பிரேதங்களைத் தோண்டியெடுக்கமுயற்சிக்கின்றனர்.

மாண்டுபோன ஆடுமாடுகளின்பிணங்கள் அங்கு மிங்கும் காணப்படுகின்றன இதுவரையில் நூறு பிணங்கள் தோண்டியெடுக்கப் பட்டிருக்கின்றன. தப்பிப்பிழைத்தவர்களில்சிலர் தங்கள்பந்துக்கள் பிரேதங்கள் தோண்டியெடுக்கப்பட்டதைக்கண்டு புத்தி தடுமாறிப் போயினர் ஆஸ்பத்திரிகளிலிருந்து வந்த அறிக்கைகளின்படி 200 பிரேதங்கள் தோண்டியெடுக்கப்பட்டிருப்பதாய் தெரிகிறது. இன்னும் 800 பேரைக் காணவில்லை.

விமானப் போட்டி

திரு. ஹின்ச்கிளிவ் முயற்சி.

லண்டன் மார்ச்சு, 13—

விமானமேறி எங்கேயோ புறப்பட்டுச் செல்லுவதாகச் சொல்லப்பட்ட காப்டன் ஹின்க்கிளிவின் விமானம் ஐர்லாந்தின் மேல்பக்கமாய் நேற்று பிற்பகல் காணப்பட்டதாகவும், அவர் 1,800 மைல் தூரத்திலுள்ள நியூபவுண்ட்லாந்துக்குச் செல்வதாய் தெரிவதாகவும் சொல்லப்படுகிறது.

அவர் கூட லார்ட் இன்ச்கேப்பின் மூன்றுவது மகளான ஆனரபிள் எல்சி மாக்கியும் போயிருக்கிறார்.

நியுபவுண்ட்லாண்டிலிருந்து வந்தசெய்திப்படி அங்கு காலநிலை விமானப் பயணத்துக்கு அனுகூலமாய் யிருப்பதாய் தெரிகிறது. அங்குஇந்தவிமானத்துக்காக கப்பல்கள் எதிர் பார்த்துக் கொண்டிருக்கின்றன.

ஆயுத குறைப்பு மகாநாடு

பிரதி நிதிகள் வருகை

ஜினீவா மார் 13—

ஆயுதக் குறைப்பு மகாநாட்டுக்கு திரு. லிட்வினவும் லுனச்சார்ஸ்கியும், வேறு பத்து ருஷிய பிரதி நிதிகளும் முன் அறிவிப்பில்லாமலே வந்து சேர்ந்து விட்டார்கள்.

எகிப்திய நிலைமை

எங்கும் அமைதி

ரக்பி மார் 13—

எகிப்திய மாகாண தலைஸ்தானங்களிலே மாணவர்கள் கிளர்ச்சி செய்து வருகிறார்கள். அதனால் பலத்த குழப்பம் ஏற்படுமென்று தோன்றவில்லை.

கயிரோவில் பள்ளிவேலை நிறுத்தங்கள் முடிந்து எங்கும் அமைதியாயிருக்கிறது. டான்டா என்ற மிடத்தில் சிறிது குழப்பம் நேரிட்டது. ஆனால் மொத்தமாய் சொன்னால் எங்கும் அமைதியாயிருப்பதாகவே சொல்லவேண்டும்.

லண்டனில் ஆப்கன் அரசர்

ஆடம்பரமான வரவேற்பு

லண்டன், மார்ச்சு 13—

ஆப்கன் அரசரும் அரசியும் டோவரில் உவேல்ஸ் இளவரசராலும், வைக்கவுன்ட் அல்லன்பியாலும் வரவேற்கப் பட்டனர்.

இங்கிலிஷ் கால்வாய் மத்தியிலிருந்தே நாலு பிரிட்டிஷ் டெஸ்ட்ராயர் கப்பல்கள் ஆப்கன் ராஜதம்பதிகள் ஏறிவந்த "மெயிட் ஆப் ஆர்லியன்ஸ்" கப்பலை புடைசூழ்ந்து சென்றன. ஐந்து யுத்த விமானங்கள் மேலாகப் பறந்து வந்தன. "மெய்ட் ஆப் ஆர்லியன்ஸ்" கப்பல் டோவர் துறைமுகத்துக்குள் வந்து சேர்ந்ததும் டோவர் கோட்டை பீரங்கிகள் மரியாதைக் குண்டுகள் போட்டன.

துறைமுகத்தில் காத்து நின்ற உவேல்ஸ் இளவரசரும் பீல்ட் மார்ஷல் அல்லபி, சர்பிரான்சிஸ் ஹம்பிரி லண்டனிலுள்ள ஆப்கன் மந்திரி முதலியோரும் கப்பலுக்குள் சென்று ஆப்கன் அரசரையும் அரசியையும் வரவேற்றனர். உவேல்ஸ் இளவரசர் ஆப்கன் அரசருடன் கைகுலுக்கினர். சூரியா அரசியின் கைகளின் மேலாக தாழ்ந்துசிரம் வணங்கினர். ஆப்கன் தேசிய கீதம் வாசிக்கப் பட்டது. ஆப்கன் அரசரும் அரசியும் கப்பலிலிருந்து இறங்கி வரும் போது அங்கு கூடிநின்ற ஜனங்கள் சந்தோஷ ஆரவாரம் செய்தனர். ஆப்கன் அரசர் நீலநிற சட்டையும் சிவப்பு கால் சட்டையும் தரித்துக்கொண்டிருந்தார். நீண்ட பச்சை மேற்சட்டையும் தரித்திருந்தார். தலையில் கருமையும் சிவப்பும் கலந்த தொப்பி அணிந்திருந்தார். சூரியா ராணி ஐரோப்பிய முறையில் உடை தரித்திருந்தார். அவர்கள் வரவேற்புக்காக அங்கு அணிவகுத்து நின்றபட்டாளத்தை ஆப்கன் அரசர் பரிசோதனை செய்தபின்பு டோவர் நகரசங்கத்தார் உபசார பத்திரம் வாசித்துக் கொடுத்தனர்.

டோவர் நகர சங்கத்தலைவரின் மனைவி சூரியா ராணிக்கு சிவப்பு வெள்ளை ரோஜாப் புஷ்பங்களால் செய்யப்பட்ட ஒரு பூச்செண்டு கொடுத்தனர். பிறகு லண்டனுக்கு புறப்பட்டனர். டிரெய்னில் உவேல்ஸ் இளவரசர் சூரியாராணிக்கு எதிர்முகமாகவும் ஆப்கன் அரசர் சர் பிரான்சிஸ் ஹம்பிரிஸிக்கு எதிர் முகமாகவும் உட்கார்ந்திருந்தனர்.

லண்டனில் வரவேற்பு

லண்டன் விக்டோரியா ஸ்டேஷனில் ஜார்ஜ் மன்னரும் மேரிராணியும் ராஜகுடும்பத்தினரும் மந்திரி சபையாரும் நகர சங்க தலைவர்களும் வந்து காத்து நின்றனர். வெளியில் எராளமான ஜனங்கள் கூடிநின்றனர்.

டிரெயின் ஸ்டேஷனுக்குள் வந்துநின்றதும், அங்கு விரிக்கப்பட்டிருந்த சிவப்பு சமுக்காளத்தின்மீது ஜார்ஜ் அரசரும் மேரி அரசியும் முன்சென்று வரவேற்றனர்.

ஜார்ஜ் அரசர் அமீர் அமனுல்லாவை சலூட்செய்து சூரியா ராணியின் கையை குனிந்து முத்தமிட்டார். மேரி ராணியும் சூரியா ராணியும் கைகுலுக்கினார்கள். எல்லோரும் அறிமுகம் செய்துவைக்கப் பட்டனர். பிறகு இரண்டு மன்னர்களும், உவேல்ஸ் இளவரசரும், டியூக் ஆப் யார்க்கும் முதல் வண்டியிலும் யிலும், இரண்டு ராணிகளும், டச்சஸ், ஆப்யார்க்கும், கன்னாட் ஆர்தர் ராஜகுமாரியும் இரண்டாவது வண்டியிலுமாக பக்கிங்காம் அரண்மனைக்கு சென்றனர். வழியில் இரண்டுகூடி நின்ற ஜனங்கள் சந்தோஷ ஆரவாரம் செய்தனர். இதற்குமுன் எப்போதும்இவ்வளவு திரளான ஜனங்கள் கூடி வந்திருந்ததில்லை என்று சொல்லப்படுகிறது.

எகிப்திய மந்திரி சபை

நஹாஸ்பாஷா முதல் மந்திரியா?

கயிரோ மார் 13.

எகிப்திய புவாட் அரசர், புதிய மந்திரி சபை அமைக்கும்படி நஹாஸ் பாஷாவை அழைத்தனுப்பியிருக்கிறார். அவர் அதைப்பற்றி யோசித்து முடிவு சொல்ல கால அவகாசம் கேட்டிருக்கின்றார்.

கப்பல் விஷயங்கள்

துறை முகத்திலிருக்கும் கப்பல்கள்

13-3-28.

பெயர்	போகும் ஊர்	புறப்படுந்தேதி
எத்தியோபியா	பினங்கு	16—
க்ளான் மக்பேடின்	கல்கத்தா	16—
பாரன்பல்ஸ்	ஆண்ட்வெர்ப், ராட்டர்டாம்,	17—
சிடி ஆப் ஜோஹானஸ்பர்க்	மார்சேல்ஸ் லண்டன்	—
டைரியா	கல்கத்தா,	19—

எதிர் பார்க்கப்படும் கப்பல்கள்.

பெயர்	போதும்ஊர்	எதிர்பார்க்கப் படும் தேதி மார்ச்சு
கோல்டென்பெல்ஸ்	கல்கத்தா	10—
சிம்லா	கல்கத்தா, ரங்கூன்	—
எம். வி. லக்ஷ்மி	கல்கத்தா	—
ரிசால்தார்	பம்பாய்	—
மெர்க்காரா	கல்கத்தா	16—
சிட்டி ஆப் ஹெரிவோர்டு	கல்கத்தா ரங்கூன்	19—
க்ளான்மெக்கேலண்டன்,	டங்கர்க்	16—
மெசரா	கல்கத்தா	16—
கதிவர்	கல்கத்தா ரங்கூன்	16—
ஆல்ஜிக்	அமெரிக்கா	17—
வெணிரோ	ஜீனோவா	18—
ஸ்ட்ரீங்கர்க்	ஆண்ட்வர்ப், ராட்டர்டாம்	20—
வார்ட்டன்பெல்ஸ்	கல்கத்தா	20—
கஸானு	கல்கத்தா	21—
ஸிடி ஆப் லின்கன்	கல்கத்தா	21—
மண்டாலா	லண்டன், டன்டி, ஆண்ட்வர்ப்	22
கொம்பயினி	சிங்கப்பூர். சைகோன் ஹைபாய்	22—
க்ளான் லிங்க்ளேர்	கல்கத்தா	22—
செல்கர்க்	கல்கத்தா	22—
பகதூர்	கல்கத்தா	26—
பர்மா	ரங்கூன்	26—
சின்கே	ரங்கூன்	—
ஸ்டாப்லென்பெல்ஸ்	ஆண்ட்வர்ப்	26—
பார்க்கன் பெல்ஸ்	கல்கத்தா	29—
க்ளான் சாட்டான்	கல்கத்தா	29

கோர்ட்டு செய்தி.

எழும்பூர் போலீஸ் கோர்ட்டு

(திரு. தமிசுதீன் சாகிப் முன்பாக.)

டாக்டர் டி. கே. ராமன் வழக்கு

சென்னை மார்ச்சு 14

சென்ற ஜனவரிமாதம் 17ந் தேதி ஹைதராபாத் நிஜாமின் குதிரைக்காரர்களில் ஒருவரான அப்துல் கபூர் கிண்டி குதிரை பந்தயத்திற்கு வந்திருந்த போது கபவாத ஜுரம் காரணமாக சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவந்ததில் அன்றிரவு மேற்படி பிணியாளியிருந்த வார்டு அஸிஸ்டெண்ட் சர்ஜனான டி. கே. ராமன் என்பவர் மேற்படி பிணியாளிக்குக்கொடுத்தமருந்தில்குளோரல்ஹைட்ரேட்என்னும்மருந்தை 90 கிரெயின்கள் கலந்து கொடுத்து அப்பிணியாளியின் மரணத்துக்குக் காரணமானதாக பூக்கடை போலிசாரால் குற்றம் சாட்டப்பட்ட வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

கம்பவுண்டர் சாட்சியம்.

முதலாவது பிராசிகியூஷன் தரப்பு சாட்சியாக விசாரிக்கப்பட்டவரும், அம் மருந்தைக் கலந்த வருமான கம்பவுண்டர் எஸ். பால சுந்தரம் தமது சாட்சியத்தில் கூறியதாவது:—நான் எதிரிமருந்து எழுதிக்கொடுத்த பிணியாளியிருந்த மெயிட்லண்டு வார்டுக்கு மருந்து கலந்து கொடுத்தேன். எதிரி டாக்டர் டி. கே. ராமன் அந்த வார்டு அஸிஸ்டெண்ட் சர்ஜனாயிருந்தார். அந்தவார்டுக்கு மேஜர் மால்கம்ஸன்தான் பெரியடாக்டர்,என்னிடம்காட்டப்பட்ட புத்தகம் பிணியாளிகளுக்குக் கொடுக்கப்படும் மருந்துகளை எழுதிவைக்கும் பிரிஸ்கிரிப்ஷன் புத்தகம். இந்த புத்தகம் மெயிட் லாண்டுவார்டு புத்தகம். சென்ற ஜனவரி 17ந் தேதியன்று அந்த புத்தகம் (எ. 1. எ. 2) மருந்துகள் கலந்து கொடுக்கப்படுவதற்கு எனக்கு அனுப்பப்பட்டது.அப்போதுமணி 1-30இருக்கலாம்.அந்த இரண்டுமருந்துகளும்மெயிட்லாண்டுவார்டு 20,22 வது படுக்கைகளிலிருந்த பிணியாளுக்காக எழுதிக்கொடுக்கப்பட்டவை. சென்ற ஜனவரி 17ந் தேதியன்று என்னிடம் வந்தபோது தற்போது அப்புத்தகத்தில் காணப்படும் திருத்தங்கள் எவையுமில்லை. அதிலிருந்த ஒன்றரை டிராம் குளோரல் ஹைட்ரேட் அதிகமென்றறிந்து. நான் என்மேலதிகாரிக்குத் தெரிவிக்கப்போன போது அவரைக் காணாமையால் டாக்டர் ராமனிடமேசென்று அது அதிகமென்று தெரிவித்தேன். அதற்கு அவர் அக்கரையில்லை என்று சொல்லியனுப்பி விட்டார். பிறகு என் மேலதிகாரியான சப்அஸிஸ்டென்ட்சர்ஜனிடம் சென்றுஇதை தெரிவித்தபோது அவர் அந்தப் புத்தகத்தை வாங்கிக்கொண்டு எதிரியிடம் சென்றார். பிறகு அவர் என்னிடம் வந்து டாக்டர் சரிதானென்றும், அதைக் கலந்து கொடுக்கலாமென்றும் சொல்லி அதில் தமது அங்கீகாரத்தைக் குறிப்பிடத்தக்க முழுகை எழுத்து மிட்டதாகக் கூறினார். பிறகு நான் மருந்தைக் கலந்து வார்டுக்கு அனுப்பி விட்டேன். அவசியமாயின் இம் மருந்தை இரண்டு தடவை கொடுக்கவேண்டுமென்று எழுதப்பட்டிருந்ததால் நான் இரண்டு அளவு மருந்து கலந்தனுப்பினேன்.

டாக்டர் பாக்கிய நாதன்

இரண்டாவது சாட்சியும், சப் அஸிஸ்டென்ட் சர்ஜனுமான டாக்டர்பாக்கியநாதன் என்பவரை விசாரிக்கப்பட்டபோது அவர் கூறியதாவது: நான் மெயிட்லாடு வார்டு டிஸ்சரியிலிருக்கிறேன். அந்த இலாகாஎன் கீழ்தானிருக்கின்றது: எனக்கு எதிரியின் கையெழுத்து நன்றாய்த் தெரியும். இக்கேஸ் சம்பந்தமான பிரிஸ்கிரிப்ஷன் எதிரியின் கை எழுத்துத் தான். என் கம்பவுண்டர் சுமார் 1.30மணி அல்லது 2மணிக்கு என்னிடம் கொண்டு வந்து அதில்குறிப்பிடப்பட்டுள்ள குளோரல் ஹைட்ரேட்டின் அளவு அதிக மெனக் காட்டினார். நான் இதைக் குறித்து டாக்டர் ராமனிடம் அறிவித்த போது அவர் அது சரிதான் எனச் சொல்லி அதில் கை எழுத்து முழுதையுமிட்டுச் கொடுத்தார். அந்த புத்தகத்தில் அப்போது ஏதாவது திருத்தம் செய்யப்பட்டதா வென்பதை நான் பார்க்க வில்லை.

பிறகு மேற்படி சாட்சி பாட்டிங்கர் வார்டு புத்த மொன்றையும், அதிலுள்ள பிரிஸ்கிரிப்ஷன் ஒன்றையும் அடையாளங் கண்டு அது எதிரியின் கை எழுத்து தான் எனக் கூறினார்.

மேஜர் மால் கம்சன்

மூன்றுவது பிராஸிகியூஷன் சாட்சியும், மெயிட்லண்டுவார்டு பெரிய டாக்டரும் முதலாவது பிஸிஷியனுமான மேஜர்மால்கம்ஸன் அடுத்த படியாக விசாரிக்கப்பட்டபோது அவர் கூறியதாவது:—எதிரி எனது உதவி டாக்டர். நான் இல்லாத வேலைகளில் அவர் எனக்குப் பதிலாகப் பிணியாளிகளுக்கு மருந்து எழுதிக்கொடுப்பதுண்டு. இந்தப் புத்தகத்தில் காணும் இக்குறிப்பிட்ட மருந்து ஒருமகமதிய பிணியாளிக்காக எழுதப்பட்டது. அப்பிணியாளி ஜனவரி 18-ந் தேதி இறந்து போனான். நான் அப்பிணியாளியை 17ந்தேதி காலை 7-30 மணிக்கு பரிசோதித்த போது அவருக்கு ஜுரமாயிருந்தது. அப்போது அவர் அபாயமான நிலைமையிலில்லை. மறுநாட்காலை நான் ஆஸ்பத்திரிக்கு வந்தபோது அப்பிணியாளி இறந்துவிட்டதாக அறிந்தேன். பிறகுநான் விசாரித்ததில் அப்பிணியாளிக்கு இம்மருந்து கொடுக்கப் பட்டதுணர்ந்தேன். அந்த பிரிஸ்கிரிப்ஷனில் 90 கிரெயின்கள் புரோமைட்சம், 90 கிரெயின்கள் குளோரல்ஹைட்ரேட்டும் எழுதப்பட்டிருந்தன. அதில் கிரெயின்களைக் குறித்தொன்றுமில்லை. ஆனால் 90 கிரெயின்களுக்குச் சமமாகிய $1\frac{1}{2}$ டிராம் என்று எழுதப்பட்டிருந்தது. அது ஜடபதார்த்தமாயின் 90 கிரெயின்களுக்குச் சமமாகும். திரவபதார்த்தமாயின் 90 மினிம்சுக்குச் சமமாகும். எதிரிதாம் எழுதிய மருந்தில் மினிம் எனக்கருதித் தான் எழுதியிருக்கவேண்டுமே யன்றி கிரெயின்களெனக் கருதியில்லை. பிரிட்டிஷ் மருத்துவ சாஸ்திரத்தில் ஒரு டோசுக்கு 20 கிரெயின்கள் தான் அதிகமாகக் கொடுக்கக்கூடிய அளவு.

எதிரி தரப்பு வக்கீல் டாக்டர் சாமிநாதன் மேற்படி சாட்சியைக்குறுக்கு விசாரணை செய்தபோது அவர் கூறியதாவது:—மெயிட்லாண்டு வார்டு, பாடிங்கன்வார்டு ஆகிய இருவார்டு சம்பந்தமான சகல வேலைகளுக்கும் நான் தான் பொறுப்பாளி, எனது உதவி உத்தியோகஸ்தர் செய்திருப்பதைக் குறித்து நான் அடுத்தப்படியாகக் கவனிக்க வேண்டும். இருபத்திரண்டாவது படுக்கையிலிருந்த பிணியாளியை நான் நேரில் சேர்க்கவில்லை. பிணியாளிகளைச் சேர்ப்பது சம்பந்தமான புத்தகமொன்றிருப்பதால் அது சம்பந்தமான விபரங்களும், பிணியாளிக்கு அப்போதிருந்த நிலைமை விபரம் முதலியவையும் தெரிந்துகொள்ளலாம். அப்புத்தகத்தை நான் திரும்பவும் கோர்ட்டுக்கு வரும்போது கொண்டு வருகிறேன்.

மாஜிஸ்ட்ரேட்:— குளோரல்ஹைட்ரேட் ஜட பதார்த்தமா? அல்லது திரவ பதார்த்தமா?

சாட்சி:— அதுஜட பதார்த்தம் தான். ஆனால் அதனைத்திரவ பதார்த்தமாகத் தான் கலந்து கொடுக்கப்படுவது வழக்கம்.

மாஜிஸ்ட்ரேட்;—திரவபதார்த்தமாகக் கொடுக்கப்பட்டால்அதற்குஅளவென்ன?

சாட்சி:—ஒன்றரை டிராம்.

மாஜிஸ்ட்ரேட்:—குளோரல் ஹைட்ரேட் $1\frac{1}{2}$-டிராம் உயிருக்கு ஆபத்தான அளவா?

சாட்சி:—சில கேஸ்களில் அது உயிருக்கு ஆபத்தாகலாம்.

மாஜிஸ்ட்ரேட்:—அந்த மருந்து கொடுத்தபோது பிணியாளிக்கு எப்படி யிருந்தது?

சாட்சி:—அதிக ஜுரமாயிருந்தது.

பின்னும் மாஜிஸ்ட்ரேட் கேட்டகேள்வியொன்றுக்குப் பதிலளித்தபோதுமேற்படி சாட்சி, அத்தகைய நிலைமையில் அம்மருந்தினால் உயிருக்கு ஆபத்து விளையக்கூடுமாவென்று சொல்ல முடியாதென்றும், சில கேஸ்களில் அது ஆபத்தாகவும், சில வற்றில் ஒன்று மில்லாமலுமிருக்குமென்றும், தாம் எதிரியாயிருந்திருந்தால் அத்தகைய அளவு கொடுத்திருக்க மாட்டாரென்றும் கூறினார்.

காப்டன் பாசு

கடைசி சாட்சியாகிய காப்டன் பாசு தாம் சென்ற ஜனவரி 19ந்தேதி அப்துல் கபூர் என்பவரின் பிரேதத்தைப் பரிசோதித்தறிந்த விஷயங்களை விளக்கி, மரணம், ஏதோ விஷத்தன்மையான மருந்து காரணமாகத்தான் ஏற்பட்டிருக்க வேண்டுமென்றும், அவருக்கு கொடுக்கப்பட்ட குளோரல் ஹைட்ரேட் அத்தகைய தன்மையுள்ளதுதானென்றும், சாதாரணமாக 10 முதல் 30 கிரெயின்தான் கொடுக்கப் படலாமாயினும் மொத்தத்தில் 24 மணி நேரத்திற்குள் 75 கிரெயின்கள் தான் அம்மருந்து கொடுக்கப்பட வேண்டுமென்றும் கூறினார்.

இந்நிலையில் கோர்ட்டு பகல் போஜனத்துக்கு கலைந்தது.

பிராஸிகியூட்டிங் இன்ஸ்பெக்டர்மாணிக்கம் பிள்ளை பிராஸிகியூஷன் தரப்பில் கேசை நடத்தினார் எதிரி தரப்பில் பாரிஸ்டர்கள் சாமிநாதனும், வி. எல். எதிராஜும் தோன்றியிருந்தனர்.

காரைக்குடியில் திரு. சிதம்பரம் பிள்ளை.

தனவணிக நாட்டு அபிமானிகள் பலர் அழைப்புக் கிணங்கித் தமிழ் நாட்டுப் பேரறிஞர் திருவாளர் வ. உ. சிதம்பரம் பிள்ளை அவர்களும் விருதை ஸ்ரீலஸ்ரீ சிவஞானயோகி அவர்களும் இம்மதி 20. நாள் சனிக்கிழமை காலை அமராவதி புதூர் கனம் பிச்சப்பா சுப்ரமணியன் செட்டியாரவர்கள் வீடு வந்து சேர்ந்தார்கள். அன்று காலை திருவாளர் அண்ணாமலை செட்டியாரவர்கள் வீட்டில் நிகழ்ந்த விருந்தில் சிறிது பேசினார்கள்.

மாநகரி

அன்றுமாலை மாநகரி ஸ்ரீ அதனாயகி வாசகசாலையின் முதலாவதாண்டு விழாவிற்குத் திருவாளர் சிதம்பரம் பிள்ளை அவர்கள் தலைமை வகித்தார்கள். அத்தனம் ஸ்ரீல ஸ்ரீ சிவஞான யோகியவர்கள் "சிவஞான போதம்" என்னும்பொருள் பற்றியும் சிராவயல் திரு ஜீவானந்தன் அவர்கள் "பெண்கள் நிலை" என்பது பற்றியும் பேசினார்கள். பின்னர் தலைவர் முடிவுரையில் பால்ய விவாகத்தைப்பற்றியும், முதிர்ந்த கிழவர்கட்கு இளம்பெண்களை கலியாணஞ் செய்வதைக் குறித்தும் பேசினார்கள். உயிர்ப்பலி யிடுதல் முதலிய அநீதியான செய்கைகளைக் கண்டித்தும் பல நல்லுரை வழங்கினர்.

தேவகோட்டை

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை திரு. பிள்ளையவர்களும், யோகிகளும், தேவகோட்டை சரஸ்வதி சங்கச்சார்பில் கூடிய கூட்டத்தில் இன்னுரைகள் பல ஆசார சீர்திருத்த சம்பந்தமாகப் பேசினார்கள். திங்கட்கிழமை காலை அவர்கள் இருவரும் திருவாளர் பிச்சப்பா சுப்ரமணியன் செட்டியாருடன் சிராவயல் காந்தி ஆசிரமம் பார்வையிடச் சென்றார்கள்.

சிராவயல்

அவ்வாசிரமத்தில் வகுப்பு வேறுபாடின்றி உயர்சாதி என்று கூறிக்கொள்ளும் வகுப்பை சார்ந்த குழந்தைகளும், ஆதித்திராவிட சிறுவர்களும் ஒன்றாகக் கல்வி கற்று வருவதைக் கண்டு மனமிக மகிழ்ந்தனர். ஆதித்திராவிடச் சிறுவர்களை அவர்முன் கொண்டு வந்து அவர்கள் எவ்வகுப்பைச் சார்ந்தவர்கள் என்று ஒருவர் கேட்டிட, அங்குள்ள சிறுவர்கள் யாவரும் ஒன்றுபோல் நல்லுடை உடுத்து தெளிவுறப் பேசியதால் வேற்றுமையொன்றுங் காணாது அச்சிறுவர்கள் செட்டிப்பிள்ளைகளாக இருக்கலாமோ என்று ஐயுற்றனராம். ஆனால், அவர்கள் தாழ்த்தப்பட்ட வகுப்பினரைச் சார்ந்தவர் என்றறிந்தபோது பேரானந்தமுற்று உயர்சாதியினரின் கொடுமையாலேயே அவ்வகுப்பினர் கீழ்மக்களாக திகழ்கின்றாரென்றும், நல்லுடையும் நற்போதனையுங் கொடுக்கப்பெறின் ஏனைய வகுப்பாருக்குச் சமமாக விளங்குவர் என்றும் கூறினர்.

காரைக்குடிப் பொதுக்கூட்டம்.

திங்கட்கிழமை மாலை 5-30மணிக்குத் திரு பிள்ளை அவர்களும், சுவாமிகளும் காரைக்குடி கதர் சாலையிலிருந்து மேளவாத்தியங்களுடன் மகர் நோன்புப் பொட்டல் என்று சொல்லப்படும் காந்தி சௌக்கத்திற்கு அழைத்து வரப்பட்டனர். அங்கு கூடிய பொதுமக்கள் கூட்டத்திற்கு ஏராளமான ஜனங்கள் வந்திருந்தனர். முதலாவதாக சிராவயல் காந்தி ஆசிரமச்சிறுவர்களால் தேசிய கீதங்கள் பாடிதலுடன் கூட்டம் ஆரம்பமாயிற்று. அப்போது இந்துமதாபிமான சங்கக்காரியதரிசி திருவாளர் அழ ராம அழகப்பச் செட்டியாரவர்கள் திரு சிதம்பரனார் அவர்கட்கும் சிவஞானயோகி கட்கும் நல்வரவுப் பத்திரம் பொதுமக்கள் சார்பில் வாசித்துக் கொடுத்தனர். பின்னர் திரு பிள்ளை யவர்கள் செய்த சொற்பொழிவின்சாரமாவது:—

கனவான்களே சகோதரிகளே!

நீங்கள் என்னை மிகப்புகழ்ந்துரைத்திருக்கிறீர்கள். அதற்கு நமஸ்காரம். சென்ற டிசம்பர் மாதத்தில் சென்னையில் நடைபெற்ற காங்கிரசிற்குச் சென்றிருந்தேன். அங்கு வந்திருந்த பல தேசாபிமானிகளையும் கண்டு பேசினேன். அவர்கள் செய்துள்ள வேலைகளைத் தெரிந்து கொண்டேன். தற்போது இங்கும் நீங்கள் பலன் தரத்தக்க வேலைகள் செய்கிறீர்கள். நமது தேசத்தில் பொய்யான காரியங்களில் நம்பிக்கைகொண்டு மயங்கி ஏராளமான பணங்களைச் செலவழிக்கின்றனர். அவசியமான காரியங்களுக்கு எவ்வளவோ பணம் தேவையிருக்கப் பொய்யானவற்றிற்குப் பெரும் பணம் செலவு செய்யப் படுவதைஎண்ணும்பொழுது வருத்தம் உண்டாகிறது. இப்பணம் நம் நாட்டிலுள்ள எல்லா சாதியார் பயன்படுகிறதென்றாலும் பாதகமில்லை. குறிப்பிட்ட வகுப்பாருக்கே இப்பணம் செல்லுகின்றது. இதுவரையில் லாப மடைந்தவர்கட்கு என்பேரில் வருத்த முண்டாகலாம். நீங்கள் நீதியை உணர்ந்து அதன்படி செய்யுங்கள். வெகு காலமாக திதி கொடுத்தல் என்னும் வழக்கத்தை நம்மவர் கையாண்டு வருகின்றனர் இவ்வாறு செய்யவேண்டு மென்று நந்தமிழ் நூற்களில் காணப்படவில்லை. நம்முன் ஓர் முக்கிய தத்துவமுண்டு. அது "அவனவன் செய்தவினை அவனவனைச் சாரும்" என்பதே. ஒருவன் நல்வினை செய்தால் நன்மை யடைகின்றான், தீமை செய்தால் அவனுக்குத் தீமை விளைகின்றது. இதுவே எல்லா மதங்கட்கும் எல்லா ஆசிரியர்கட்கும் ஏற்ற கோட்பாடு, ஆனால் அது தற்காலத்தில் மாறாக இருக்கிறது. நமது முன்னோர்கள் சூட்சும உடலோடு பிதுர்லோகத்திலிருந்து அவர்கள் செய்த பாவத்திற்காகக் கஷ்டம் அனுபவிப்பதாகவும், அதைபோக்குவதற்கு நாம் சிரார்த்தம் என்னும் பேரால், பல தானங்களும், வெள்ளி, தங்கம் ஆகியவற்றால் பாத்திரங்களும் அரிசி, காய்கறிகளும் குறிப்பிட்ட சமூகத்தவர்க்குக் கொடுத்தல் அவசியமெனக் கருதி அவ்வாறு செய்துவருகின்றோம். இதனால் நம்பிதிர்க்கள் சுவர்க்கத்தை யடைவார் என்றும் நம்புகிறோம். இவ்வாறு பிள்ளைகள் செய்வதால் தந்தை தான் செய்த பாபத்தினின்றும் மீள்வது உண்மையாயின் நமது தத்துவமான "அவனவன் செய்தவினை அவனவனைச் சாரும்" என்பது பொய்யாகப்போகிறதன்றோ? ஒருவன் செய்த குற்றத்திற்காக அவனைச் சார்ந்தார் மன்னிப்புக்கேட்டுக்கொண்டால் கோர்ட்டார் விடுவார்களா? உண்மை நீதிபதிவிட மாட்டான் லஞ்சம் வாங்குபவனே அதற்கு ஒருப்படுவான், குற்றஞ்செய்தவன். அதற்குள்ள தண்டனையடைதல் வேண்டும். கருணை காட்டுவது எளியோரிடமன்றி குற்றவாளியிடமன்று. குற்றஞ்செய்தவர்களைமன்னித்துக் கொண்டேயிருந்தால் உலகம் ஒழுங்காக நடைபெறாது. எமன் எப்போதும் தண்டித்துக்கொண்டேயிருப்பினும் தருமன் என்று அழைக்கப்படுகிறான். காரணமென்னை? நடுநிலைமையோடு சிக்ஷித்தலால் அன்றோ? ஆகவே, இறந்தவர் பெயரால் மூட நம்பிக்கையால் பார்ப்பனருக்கோ, சைவருக்கோ பணங்களை கொடுக்கவேண்டாம். இவ்வாறு கூறுவதால் என்னை நாஸ்திகன் என்று சிலர் கூறலாம். பிறரால் ஏமாற்றப்படுவதைத் தடுக்கும்பொருட்டே நான் சொல்லுகிறேன்.

வள்ளுவர் ஒப்பற்ற அறிஞர். நானும் அவரைக் கடவுளென்றே போற்றுகின்றேன். அவர் நூலில், 'வில்' என்றும், 'வேல்' என்றும் கூறப்படுகின்றதேயன்றி துப்பாக்கி என்றோ, பீரங்கி என்றோ இல்லை. தற்போது யுத்தத்தில் துப்பாக்கியும், பீரங்கிகளுமேயிருக்கின்றன. வள்ளுவர் "துப்பாக்கியைப்பற்றியும், பீரங்கியைப்பற்றியும் ஒன்றும் சொல்லவில்லை. எனவே, அச்சாதனங்களைக்கொண்டு யுத்தம் செய்யமாட்டேன். வள்ளுவரை விட நாம் பெரிய மேதாவிகளா" என்று ஒருவன் கூறிக் கொண்டிருந்தால் இது எவ்வளவு மூடத்தனம் "தென்புலத்தார் கடன் ஓம்பல் என்பதற்கு 'பிதுர்க் கடன்' 'செய்தல்" என்றே வைத்துக்கொள்ளுவோம், அவ்வாறாயினும் தங்கலோட்டா வெள்ளித்தட்டு ஆகியவைகள் கொடுக்கவேண்டுமென்றுகாணவில்லையே? "பிதுர்க்கடன்' செய்தல்" என்றால் பிதுர்களை ஓம்புதல் என்றே பொருட்படும். பிதுர்க்களை ஓம்புதற்குப் பல வழிகள் உண்டு. பிள்ளைகட்கு அவர் பெயரிடலாம். அவர்கள் பெயரால் பாடசாலைகள் வைத்திய சாலைகள் ஆகியவை ஏற்படுத்தலாம். ஆனால் இப்புண்ணியங்கள் செய்தவனைச் சாருமே யன்றி பிதுர்களைச் சாராது.

பின்னர், கோவில்களில் ஆடு, கோழிகளை பலி யிடுவதைப்பற்றியும், சிறிய பெண்களுக்கு கிழவர்களை மணஞ்செய்தல், பெரிய பெண்களுக்குச் சிறிய பையன்களை கலியாணம் செய்தல் ஆகிய கொடிய வழக்கங்களால் நேரும் துன்பங்களையும், அயல் நாட்டிற்குப் பெண்களை உடனழைத்துச் செல்ல வேண்டுவதின் அவசியத்தையும் எடுத்துரைத்தனர். கடைசியாக மக்களிடையே உயர்வு தாழ்வு என்பது இல்லை என்றும் பூணூல் இட்ட ஒரு காரணத்தால் ஒரு வகுப்பினரை மேலென எண்ணுதல் மிகத்தவறென்றும் பொதுக்கோயில்களில் எல்லோருக்கும் செல்லும் சம உரிமையுண்டெனவும் கடவுளுக்கும் நமக்கும் இடையே தாகர்கள் வேண்டுவதில்லை என்றும் கூறினர்.

பின்னர், சுவாமி சிவஞானயோகிகள் "ஆலயவழிபாடு" பற்றி பேசிய பின்னர் கூட்டம் இரவு [illegible]மணிக்கு இனிது நிறைவேறியது.

மறுநாள் காலை சா. தெ. பங்களாவில் திருக்குறள் பொருள் பற்றி அரிய சொற்பெருக்கு ஒன்று சிதம்பரனாரவர்களால் நிகழ்த்தப்பட்டது. பின்னர், அவர்களும் சுவாமி சிவஞான யோகிகள், பிச்சப்பா சுப்ரமணியன் ஆகியவர்களுடன், ஜயங்கொண்டபுரத்தில் ஸ்ரீமான் மெய்யப்ப செட்டியாரவர்களால் நாடத்தப்படும் இருபாடசாலைகளையும் பார்வையிட்டுக் கானடுகாத்தான் திரு. ஜம்புலிங்கம் செட்டியாரவர்கள் வேண்டுகோட்கிணங்கி அவண் சென்று, நல் விருந்துண்டு நன் மொழிபலவும் வழங்கினர்.

பொதுக் கூட்டம்

செவ்வாய்க்கிழமை மாலை 6-மணிக்கு காரைக்குடி காந்தி சௌக்கத்தில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தலைவர்கள் கானடுகாத்தானிலிருந்து வருவதற்கு சிறிது தாமதப்பட்டதால் திருவாளர் அரு. சோம சுந்தரம் செட்டியாரவர்கள் ஓர் அரிய சொற்பொழிவு பெருக்கத்துடன் நிகழ்த்தினர். அவர்தம் சொற்பொழிவில் இந்தியர்கள் ஓர் செத்த சமுதாயத்தினராகி விட்டனரென்றும், உண்ணுவதும் உறங்குவதும் உல்லாசமாக யிருப்பதுமே தம்வேலை என எண்ணிவருகின்றார்களே யன்றி ஒவ்வொரு நாட்டினரும் எவ்வெவ்வழிகளில் முன்னேற்ற மடைகிறார்கள். எவ்வாறு உலகில் முன்னணியில் நிற்கும் சமுதாயத்தாருள் தலைசிறந்து விளங்குகின்றார்கள் என்பதைச் சிறிது கவனிப்பதில்லை என்று மிகக் கவலையுடனுரைத்து ஒவ்வொரு தமிழரும் இந்தியரும், தன்னம்பிக்கையுற்று சாதுவாஸ்வானியவர்கள் கூறுவதுபோல் வீரமற்று நலிவுற்றுப்பணியாற்றிடும் தன்மையற்ற இந்தியாவே, செல்க, செல்க, செல்க, ஆண்மை பெற்று சக்தியுற்று விளங்கிடும் இள இந்தியாவே வருக, வருக, வருக, என்று வீரமுரசறைந்து நம்மவர் முன்னேற்றத்திற்கு முயலுவோம் என்று கூறித்தம் உரையை முடித்தனர்.

இச்சமயம், திருவாளர் சிதம்பரம் பிள்ளை ஆகியோர் வந்து சேர்ந்தனர். அப்போது சுவாமி சிவஞான யோகி அவர்கள் அவைத்தலைமை வகிக்க திருவாளர் சிதம்பரம்பிள்ளை அவர்கள் "கல்வி முறையும் பெண்கள் சீர்திருத்தமும்" எனும் பொருள் பற்றிப் பேசினார்கள்.

அதன் சாரமாவது:—

தலைவர்களே! சீமான்களே! சீமாட்டிகளே!

நமது தேசத்தில் இப்பொழுது கல்வி கற்பிக்கும் முறை பொருத்தமானதாயில்லை. அதனைச் சீர்திருத்தி நின்றுலைக்குக் கொண்டுவரத் தலைவர்கள் ஆராய்ந்து முடிவுசெய்திருக்கிறார்கள். அம்முடிவை நீங்கள் நன்கு ஆராய்ந்து நன்மையெனத் தோன்றும்பட்சத்தில் அதனைக் கவர்மெண்டுக் கலாசாலைகளிலும், ஸ்தல ஸ்தாபனங்கள் ஏற்படுத்தியுள்ள கலாசாலைகளிலும் நடைமுறைக்குக் கொண்டுவர முயற்சியுங்கள். புதிதாக ஏற்படுத்தப்பெறும்கலாசாலை, பாடசாலைகளிலும் இத்திருத்தங்களைச் செய்ய வேண்டும். நம் தேசத்தினர் கலாசாலைகளில் படித்து வெளிவந்தவுடன் கவர்ன்மெண்டு உத்தியோகங்கட்கும் கிளர்க்கு வேலைகட்கும் முயற்சி செய்கின்றனர். அவர்கள் அவ் வேலைகட்கன்றி வேறு வேலைகட்கு உபயோகமானவர்களாக இருக்கவில்லை. கவர்ன்மெண்டிலும் எத்தனை பேருக்குத்தான் உத்தியோகங் கிடைத்தல் கூடும்? இந்தியாவில் ஸ்கூல்பைனல் பரீட்சையில் தேறியவர்கட்கு எத்தனை பேருக்கு உத்தியோகங் கிடைக்கிறதென்று கணக்கிட்டால் ஆயிரத்துக்கு ஒருபேரும், எப். ஏ., பி.ஏ., எம்.ஏ.,க்களில் ஆயிரத்துக்கு இருபத்தைந்து பேருக்கும்மேல் உத்தியோகங் கிடைப்பதில்லை. மற்றவர்க்குப் பிழைப்புக்கு வழியில்லாமலிருக்கிறது. வக்கீல் உத்தியோகத்தில் எனக்குள்ள அனுபவத்தைக் கூறுகிறேன். 1924-ம் ஆண்டில் மீண்டும் நான் வக்கீல் தொழிலில் புகுந்தேன். அப்போது சராசரி மாதம் ரூபாய் ஆயிரம் எனக்கு வரும்படி வந்தது. அவ்வமயம் இருபது வக்கீல்களே என்னுடனிருந்தனர், இப்பொழுது நாற்பது வக்கீல்களிருக்கின்றனர். எனவே இப்பொழுது மாதம் ரூபாய் நானூறு, ஐநூறுதான் வருகின்றது, பிராமணர், பிராமணரல்லாதார் சண்டைக்குக் காரணம் உத்தியோகமென்றே கூறலாம்.

தொழிற் கல்வி!

நமது கலாசாலைகளில் தொழிற்கல்வி கற்பிக்கவேண்டும். பணமுள்ளவர்கள் தேசசரித்திரம் பூகோள சாஸ்திரம், தத்துவசாஸ்திரம் முதலியவைகளில் தேர்ச்சிபெறுதற்கு வேண்டிய கல்வியைக்கற்கலாம். சாதாரண மாணவர்கள் எல்லோரும் நன்கு எழுதவும். பேசவும் அவசியமானல் உபந்யாசம் செய்யவும்வேண்டிய கல்வியைக் கற்பதோடு தொழிற்கல்வியையும் கற்கவேண்டும். தந்திவாசிக்கும் அளவு ஆங்கிலமும் கற்றுக்கொள்ள விவசாயம், கைத்தொழில் ஆகியவற்றை மாணவர்கட்குப் போதிக்கவேண்டும். நன்செய், புன்செய், தோட்டம் ஆகியவற்றில் மாணவ, மாணவிகளுக்குப்பயிற்சிஅளித்தல் அவசியமாகும். புஞ்சை, நஞ்சைகளில் வேலை செய்வதற்குக்கூடக்கல்வி அவசியமாவெனக் கேட்கலாம் இருபது வயதுவரை வெயிலில் நின்று வேலை செய்யாத பழக்கத்தால் இருபது வயதுக்கு மேல் நன்செய், புன்செய் ஆகியவற்றில் வேலை செய்தல் கஷ்டமாக இருக்கின்றது. எனவே சிறு வயதிலேயே அப் பயிற்சியை அளித்தல் வேண்டும். நான் ஜெயிலில் இருக்கும் பொழுது மீண்டும் வக்கீல் தொழில் செய்வதில்லை யென்று சத்தியமும் செய்து கொள்வதுண்டு. ஆனல் வெளியில் வந்து பத்திரிகை ஆபிசில் உதவி ஆசிரியனாக இருந்தேன். நெய் வியாபாரம் செய்தேன். ஆனல் ஒன்றும் சரிப்பட்டு வரவில்லை. எனக்குநிலங்கள்உண்டு. எனினும் சிறு போழ்தில் வெயிலில் வேலை செய்து பழக்கமின்மையால் விவசாயம் செய்து ஜீவிக்க முடியவில்லை. என் மனைவி மக்களும் அவ்வாறே இருக்கின்றார்கள். என் செய்வது! இனி கலாசாலைகளில் ஒருமணி நேரம் பாஷா கல்வியும் 6-மணி நேரம் தொழிற் கல்வியும் கற்பித்தல் வேண்டும். கைத்தொழில் விவசாயம் ஆகியவற்றைக் கட்டாயப் பாடமாக வைத்தல் அவசியமாகும்.

ஆதித் திராவிடர்கள்

நேற்று ஸ்ரீமான்மெய்யப்பசெட்டியார் (ஜெயங்கொண்டபுரம், மெ. ராம. மெ.) அவர்களால் ஆதித் திராவிடர்களுக்காக வைக்கப் பெற்றிருக்கும் பள்ளிக்கூடத்தையும், மேல் ஜாதியாருக்காக வைக்கப்பட்டிருக்கும் பள்ளிக்கூடத்தையும் பார்த்தேன். ஆதித்திராவிட பள்ளிப்பிள்ளைகட்கு வேட்டி வாங்கிக்கொடுக்கிறார்கள். இன்னும் வேண்டும் சௌகரியங்களைச் செய்து கொடுக்கிறார்கள். எனினும் அங்குக் கொடுக்கப்படும் கல்வி முறையைக் கண்டபொழுது எனக்கு ஒரு சந்தேக முண்டாயிற்று. அதனை இங்கும் தெரிவிக்கிறேன். தனவைசியர்கட்குப் பண முடையில்லாதிருக்கலாம். அவர்கள் நாற்பதினாயிரம் ஜனங்கள் தான். மற்ற ஜனங்கள் அவ்வாறில்லை. எனவே அவர்களுக்குத் தொழிற் கல்வி போதிக்கவேண்டும். அத்தொழிலில் வரும் வரும்படியை அவர்கள் பெற்றோர் கட்குக் கொடுத்துவிடலாம். ஆதித்திராவிடர்கள் நன்கு படித்து விட்டாலும் உத்தியோகம் கிடைத்தாலல்லவா சாப்பிட்டுக் கொண்டிருக்க முடியும்? படித்தவர்கள் எல்லோருக்கும் உத்தியோகம் கிடைத்து விடுமா? ஒவ்வொரு கலாசாலையிலும், குருகுலம்போல தோட்டம். நன்செய், புன்செய் முதலியன ஏற்படுத்தித் தொழிற் கல்விபோதிக்கவேண்டும். ஆதித் திராவிட மாணவர்கட்குப் பனிரண்டு மணிவரை விவசாயமும், அதற்குமேல் பாஷாஞானமும் போதிப்பது நன்மைதரும். பணமில்லாமல் ஒருவனும் ஒரு வேலையும் செய்ய முடியாது. தரித்திரனாக ஒருவன் இருப்பானாயின் அவன் அறிவு திறம்பட வேலை செய்வதில்லை. அரசாங்கத்தாரால் அனைவருக்கும் உத்தியோகம் கொடுக்க முடியுமா வென்பது பற்றி நான் ஒன்றும் கூறமுடியாது. அரசியல் விஷயங்களைக் குறித்து நான் ஒன்றும் இப்பொழுது அதிகமாய் பேசுவதில்லை. சாரமாகச் சொல்வதுண்டு. அரசியலைப்பற்றிப் பேச நண்பர்களான திரு.ரங்கசாமி ஐயங்கார், சத்தியமூர்த்தி ஆகியவர்களேதகுதியுடையவர்கள். ஏனென்றால் சில சமயங்களில் பொய்பேச நேரலாம், புகழும்படி நேரலாம் எனவே நான் அதற்குச் சிறிதும் அருகனல்ல. நான் பேசினேனானல் 'ஸ்பிரிட்' உண்டாகிவிடும். உடனே என்மனதில் உள்ளன வெல்லாம் வெளியில் வந்துவிடும். உடனே இன்னும் நான்கு வருஷமோ நாற்பது வருஷமோ ஜெயிலுக்குப் போகவேண்டுவதுதான். பின்னர் என் பெண்டாட்டி, பிள்ளைகளெல்லாம் சாப்பாட்டிற்குத் திண்டாட வேண்டியதுதான். பொருளில்லாமல் ஒரு வேலையும் செய்ய முடியாது. அதற்குத் தொழிற் கல்வி, விவசாயம் கற்பிக்க வேண்டியது அவசியமாகும். சட்டசபை மெம்பர்களிடம் சொல்லி கட்டாயமாக விவசாயம், கைத்தொழில், ஆகியவற்றைப் போதிக்க வேண்டுமென்று மசோதாக் கொண்டுவரச் செய்யுங்கள். அதனை அவர்கள் செய்யாவிட்டால் அடுத்த தேர்தலில் அவர்கட்கு ஓட்டுக்கொடுக்காதீர்கள். தனவைசியர்கள் கலாசாலைபோன்றவைகளுக்குப் பொருள் நல்குவது சந்தோஷத்தைத் தருகின்றது. ஆனல் பணத்தைப் பிறரிடம் கொடுத்தால் எடுத்துக்கொண்டுவிடுவார்களோ என்றுப் பயப்படக்கூடாது. எனினும்வறுமையுடையவனிடம் பணப்பொறுப்பை விடுதல் தகாது. ஏனெனில் தனக்குத் தேவையிருக்கும்போது அப்பணத்தை உபயோகப்படுத்தி விடுவான்.

பெண்மக்கள் நிலை.

நம் நாட்டில் பெண் மக்களை சமைக்கும் இயந்திரமாகச் செய்து விட்டனர். இந்நாட்டில் அது இல்லையென எண்ணுகிறேன். பிள்ளைபெறும் இயந்திரமாகஅனைவருமே செய்துவிட்டோம், நம்மைப் போல் பெண்கட்கும் சம உரிமை யிருக்தல் வேண்டும். எல்லா விஷயங்களிலும் அவர்களை ஆலோசித்துச் செய்தல் அவசியமாகும். ஆனல் அவர்கள் அதற்குத் தகுதி யுடையவர்களா என்று பார்க்கின், இல்லை. ஏன்? அவர்கட்குக் கல்வி இல்லாமையே. எனவே பெண்கட்கு கல்வி கற்பிக்க வேண்டியது அவசியமாகும், இந்நாட்டில் மனைவியோடு பேசுவது கஷ்டமென்று எனது நண்பர் சொன்னர். இதுமிக மோசமானது. பெண்களும் தங்கள் கணவர்களை நன்கு மதித்து நடக்கவேண்டும். எச்சில் இலையில் சாப்பிடும் வழக்கம் எங்கள் ஜாதியில் உண்டு. இங்கு உண்டோ என்னமோதெரியவில்லை. (உண்டு,உண்டு என்று ஜனங்கள் கூறினர்) பிராமண வீட்டிலும் இருக்கிறதா? (இருக்கிறது என்றனர்.) நாகரிக மில்லாதவர் என்பவரிடத்தில் கூட இக்கொடுமையில்லை. அயலூருக்கு விருந்துக்குப் போயிருந்தாலும், ஆயிரம்பேர் சாப்பிட்ட இலைகளில் என் இலையைத் தேடிப்பார்த்து அதிலே [illegible] மனைவி சாப்பிடவேண்டும், அதி[illegible]ழுந்திருக்கும். இன்னொருவ[illegible] இலையில் அப்பளங்கள் விழுந்[illegible]ாம், அவைகளை கவனிப்பதில்லை. எச்சில் இலையை நாய்களன்றோ தின்னும்? முருங்கக்காயை கடித்து மென்று தின்றுவிட்டு துப்பியிருப்பேன், (சிரிப்பு) அதில் உண்ணவேண்டும். அப்படி யில்லாவிட்டால் புருஷன்மேல் பற்றில்லாதவளென்று கூறப்படுகிறது. எச்சிலிலையில் சாப்பிடாவிட்டால், 'புருஷன் இலையில் சாப்பிடாத தேவடியாள்' என்று சொல்லுகின்றனர். எனக்குக் கல்யாணம் ஆனது முதல் எச்சில் இலையில் உண்ணக்கூடாது என்று என் மனைவிக்கு உத்தர விட்டுவிட்டேன். பெண்கட்கும் சமசுதந்திரம் கொடுக்கவேண்டும். ஆனல் கல்வி இல்லாத இக்காலத்தில் தீர்ப்பளிக்கும் உரிமை புருஷனிடம் இருக்கவேண்டும், உரிமைபெறப் பெண்கள் போராடுதல் வேண்டும்.

பத்திரிகைச் சண்டை

உள்ளூர் சம்பந்தமாக ஒன்று கூற விரும்புகிறேன். தனவைசியர்களால் நடத்தப்படும் இரண்டு பத்திரிகைகள் கொடிகட்டிச் சண்டை இட்டுக் கொள்கின்றன. அதனை நான் இலேசாக நினைத்தேன். பிச்சப்பா சுப்பிரமணியன் செட்டியார் குமரன் ஆசிரியருக்கும் ஊழியன் ஆசிரியருக்கும் நண்பர். பார்க்கும் பொழுது இருவரிடத்திலும் ஒரேவிதமான அன்பிருக்கிறதாகவே தோன்றுகின்றது, அவர்தலையிட்டால் இச்சண்டையை ஒழித்து விடலாம். ஆனல் அவர்கள் இருவர்களையும் சமாதானப் படுத்த முடியாதென்று சொல்லுகிறார்கள், சந்தாதார்கள் கூட்டம் போட்டு இம்மாதிரி ஒருவருக்கொருவர் சொந்தச் செய்திகளைக் குறித்துச் சண்டையிட்டு கொள்வதைத் தடுக்க வேண்டும். குமரனில் 'இதோடு முடித்து விட்டோம்' என்ற குறிப்பைப் படித்துப்பார்த்தேன்.

சிவஞான யோகிகள்.

அன்பர்களே; இதுவரை சிதம்பரம் பிள்ளையவர்கள் சமூகசீர்திருத்தம், கல்வி வளர்ச்சி, கல்விமுறை, பெண்களுக்கு உரிமையளித்தல் ஆகியவைப்பற்றிவெகு அழகாக விரித்து உரைத்தார்கள். அவை நாம் அவசியம் ஏற்றுக் கொள்ளவேண்டிய சீர்திருத்தங்களே. இளைஞர்கள் அறிவு பெற்றுமுன்னேறுதலும், பெண்கள் உரிமைபெற்று வாழ்தலும் நாட்டின் நல்வாழ்விற்கு இன்றியமையாதனவே. பின்னர் ஆலய சீர்திருத்தத்தைப் பற்றி எடுத்துரைக்குங்கால், "திருக்கோயில்களில் சாதிவேற்றுமையின்றி அனைவரும்புகலாம். காசிக்கோயிலில்புகுதலும்தாமேவழிபாடு இயற்றுதலும்கண்கூடு. இம்முறைகுறைவிடையதன்று. பூர்வகாலம் முதல் அன்பர்களே உருவங்களை நிலைநாட்டி வருகிறார்கள். பிறகே தாகர்கள்தோன்றிப் பிடுங்குகிறார்கள். தமிழர்களுக்குள் ஆதிகாலம் முதல் சாதி வேற்றுமைகிடையாது, திணையினளவாகவே, குறிஞ்சி நில மக்கள், முல்லை நில மக்கள், மருத நில மக்கள், நெய்தல் நில மக்கள், பாலை நில மக்கள் எனப் பெயர் பெற்றனர். நிலத்தின் பெயர், இடத்தின் பெயர்ஆகியவைகளே மக்களை வேறு பிரித்தது. தமிழர் தொன்மறையாகிய தொல்காப்பியம் இவ்வாறே ஐந்து நில மக்களும் கொள்வினை, கொடுப்பினை செய்து கொள்வதுண்டு" என்று மிக அழகு பெற மொழிந்தனர்.

வேதப்பொருள்பற்றிக் கூறியபோது அப்பெரியார் குறிப்பிட்டதாவது:—"வடமொழியில் வேதத்திரயி என்றிருப்பதால் மூன்று வேதங்களே உண்டு எனத் தெரியவருகிறது, ஆனல் தமிழிலேயே நான் மறைகள் இருக்கின்றன. வேதம் ஈசுவரனல் உண்டாக்கப்பட்ட தென்பது உபசாரமே, வேதமந்திரங்கள்ஒவ்வொன்றையும் ஊன்றிவாசித்தப்பார்க்கின்,ரிஷிகளால் எழுதப்பட்டதென்றே தொடக்க வுரைகளால் தெரியக்கிடக்கின்றது. வேதத்தில், மூன்று தலைமுறையாக சோமயாகம் செய்து, பசுவதையும் மதுபானமும் செய்யாவிடின் பிராமணத்தன்மைகெட்டுவிடும் என்று வேதம் முறையிடுகின்றது. வேத பாடசாலைகளுக்காக நாம் பணத்தை வாரிவாரிக் கொட்டுகின்றோம். ஆனல் அவ்வேதத்தில், தமிழர்களை

மிலேச்சர் என்றும். சண்டாளர்களென்றும் கூறப்பட்டிருப்பதுடன் தமிழர்கள் நாசமடைவதற்குள்ள பிரார்த்தனைகள் பல அடங்கியிருக்கின்றன. எனவே நாம், நம் பணத்தைச் செலவுசெய்து நாம் நாசமாய் அழிந்திடவேண்டும். மந்திரங்களேயே படிக்கச் செய்து வருகின்றோம். இது எவ்வளவு வெட்கக்கேடானது, பரிதபிக்கத்தக்கது. மேலும் வேதத்தில் சிறு தெய்வ வழிபாடுகளே காணப்படுகின்றன. ஆனல் பழந்தமிழ் நூலாகிய தொல்காப்பியத்தில் சிவவழிபாடு சிறப்புறக் கூறப்பட்டிருக்கின்றது.''

கடைசியாக, சித்தவைத்திய முறையை எடுத்துரைத்து, அம்முறையில் நோயினை மாற்றிடும் வழிகளிருப்பதோடு, நோய்வராது தடுத்துப் பல்லாண்டு சுக, வாழ்வு பெற்றிடும் முறையும்இருக்கின்றதென்றும் அதற்கே கல்பம் என்று கூறுவார்களென்றும் உரைத்துச் சபையோர்கள் அனைவரும் சித்த வைத்தியத்திற்கு வேண்டும் உதவியளித்திடவேண்டுமென்றும்கேட்டுக் கொண்டார்கள்.

தலைவர் முடிவுரையின் பின்னர்திருவாளர் முரு அருணசலம் செட்டியாரவர்களால் நன்றி கூறப்பட்டு கூட்டம் 6 20க்கு இனிது நிறைவேறியது.

திரு பிள்ளையவர்களும் யோகிகளும் அன்றிரவே தம் ஊருக்குப் பிரயாணமாயினர்.

தூத்துக்குடி.

வர்த்தகக் குமஸ்தாக்களின் வேண்டுகோள்.

ஸ்ரீமான் இந்திய வியாபாரச் சங்கக் காரியதரிசி அவர்களுக்கு, 4-3-27ல் எழுதிக்கொடுத்த மனு என்னவென்றல்,

இந்திய வியாபார சங்க காரியதரிசி அவர்கள் சமுகத்திற்கு இதனடியில் கையொப்ப மிட்டிருக்கும் வர்த்தகக் குமஸ்தாக்களாகிய நாங்கள் விண்ணப்பித்துக்கொள்வது யாதெனில்:-முக்கியமாக வியாபார ஸ்தலத்திற்கு தேவையான கஸ்ட்டம் ஆபீஸ் ரயில்வே புக்கிங் ஆபீஸ் அண்டு பேங்கு ஸ்தலங்களும்இன்னும் இதர அரிய பெரிய வியாபாரஸ்தலங்களும் ஞாயிற்றுக்கிழமை தோறும் வீவு முறைநாளாக இருக்கின்றதுமன்றி அன்று தினம் கூலியாட்களும் (வண்டி மாடுகளுக்கும் கூட) அலுவல் நின்று ஓய்வு நாளாகவேயிருக்கிறது. எங்களுக்கு மட்டும் ஷெ நாள் விடுமுறை நாளாயில்லாமலிருப்பது எங்கள் தூர் அதிஷ்ட்டந்தானெக் கருதுகிறோம். எங்கள் தூர் அதிஷ்ட்டத்தை தாங்கள் நிவர்த்திசெய்து கொடுப்பீர்களென்று நினைக்க இவ்விண்ணப்பத்தை தெரியப்படுத்துகின்றோம். ஆகையால் ஷெ விண்ணப்பத்தை மனமுவந்து ஏற்றுக்கொண்டு வேண்டிய ஏற்பாடுகள் செய்து எங்கள் குறையை நிவர்த்திக்கும்பொருட்டு கேட்டுக் கொள்கிறோம். என்று யெழுதி இவ்வூரிலுள்ள வர்த்தக குமஸ்தாக்கள் எல்லோரும் கையொப்பமிட்டு இந்திய வியாபாரச்சங்கத்தில் கொண்டு போய் கொடுத்துவிட்டார்கள் 6-3-28-ல் கொடுத்த மனுவுக்கு 7-3-28-ல் ஸ்ரீமான் இந்திய வியாபாரச்சங்க செக்ரெட்டேரி விக்டர் பார்னாந்தீஸ் அவர்கள் 7-3-28;ல் கொடுத்த பதில் யென்னவென்றல் வர்த்தகக் குமஸ்தாக்கள் கொடுத்த மனுவுக்கு (மெம்பர்) கையெழுத்து ஒன்றுமில்லை ஆதலால் தங்கள் மனுவை மீட்டிங்கில் போடப்பட மாட்டாது யென்று சொல்லிவிட்டார்கள். மறுபடியும் இவ்வர்த்தகக் குமஸ்தாக்கள் கூடி எடுத்த காரியத்தை விடக் கூடாதென்று நினைத்து மறுபடியும் 7-3-28ல் யெழுதிய மனு யென்ன வென்றல் ஸ்ரீமான் இந்திய வியாபாரச் சங்க காரியதரிசி அவர்களுக்கு யெழுதியது நேற்று 6-3-28ல் வர்த்தகக் குமஸ்தாக்கள் கொடுத்தமனுவை தயவு செய்து மீட்டிங்கில் போடும்படி கேட்டுக்கொள்கிறோம் என்று யெழுதி கீழ்க்கண்ட மெம்பர்களிடம் கையொப்பம் வாங்கி மறுபடியும் 8-3-28ல் சுமார் 5-30-மணிக்கு கொண்டுபோய் கொடுத்து விட்டார்கள். உடனே 8-3-28ல் நடக்கப்போகிற மெம்பர்கள் மீட்டிங்கில் போட்டு விட்டார்கள். வர்த்தகக் குமஸ்தாக்கள் குறையை நிவர்த்தி செய்து வைக்கலாமென்று நினைக்க இதனடியில் கையொப்ப மிட்டிருக்கும் முதலாளி மார்களுக்கே இத்திருமந்திர நகர் வர்த்தகக் குமாஸ்தாக்களாகிய நாங்கள் எல்லோரும் இவர்களே இத் திருமந்திர நகருக்கு தேசதலைவர்கள்என்று நினைக்க இவர்களுக்கு யெங்கள் மனமார்ந்த வந்தனத்தை செலுத்துகிறோம்.

எம் இ முகங்குமாரசாமி பிள்ளை
ஏ எஸ் என், நடராஜ நாடார்
கச்சி சேட்
கே எஸ் பி டி முத்தைய நாடார்
வி டி வி தர்மப் பெருமாள் பிள்ளை
கே ராமலிங்கம் பிள்ளை
பி எஸ் ஆர் கூடலிங்க நாடார்
எச் பி எம் சேட்
ஏ. ஆர். சி. டி. ஏ. பி. எஸ். கே. பரமசாயகம் பிள்ளை எப். எக்ஸ், பி. வி. சன்ஸ்
என். ஏ. எஸ். டி. தாயுமானசாமி நாடார்
எம். ஏ. ஏ. எப். பிரதர்ஸ், வி. என். பி
ஆர். எம். வி. என். எம். என். ஏ. எஸ்.
எஸ். ஏ. எஸ். தங்கசாமி நாடார், ஏ. ஆர்.
எஸ். திருமேனிநாத நாடார், டி. ஏ. எஸ்
ஏ. பி. டி. என். வி. கே. எல் கர்த்தசாமி பிள்ளை,எஸ்.டி. சிதம்பரம் பிள்ளை, பி.ஏ. குமரவேல் நாடார் கே. கே. ஏ. ஆறுமுக நாடார்

ஸ்ரீமான் வி.டி.வி. தர்மம் பெருமான் பிள்ளை அவர்கள் தலைமையின்கீழ் 8-3-28ல் சுமார் 7-30 மணிக்கு இந்திய வியாபாரச் சங்கத்தில் மீட்டிங் நடைபெற ஆரம்பித்து சுமார் பகல் பதி மூன்று மனுக்கள் பாஸ் செய்தும் சில மனுக்கள் (ஜெனரல் பாடி மீட்டிங்கிக்கு கொண்டுவரும்படியும் சொல்லி முடித்த பிர்ப்பாடு கடைசியில் (புன்சிரிப்பாக) இந்த வர்த்தகக் குமாஸ்தாக்களின் மனுவை யெடுத்து திரு. யு. டி. வி. தர்மப் பெருமாள் பிள்ளை அவர்கள் வர்த்தகக் குமஸ்தாக்கள் ஞாயிற்றுக்கிழமை ரஜா வேண்டு மென்று யெழுதியிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். உடனே திரு. பி. யஸ். ஆர். கூடலிங்க நாடார் அவர்கள் ஆமோதித்துப்பேசினார்கள். அதன் பின் 2வதாக திரு. அ. ச. நடராஜ நாடார் அவர்கள் அதை ஆமோதித்தார்கள் 3வதாக ஏ. யம். யன். யம். முதலாளி அவர்கள் ஆமோதிக்க ஒருவரும் இல்லை யென்று சொன்னார்கள். 4வதாக ஏ. யஸ். யன். நடராஜ. நாடார் அவர்கள் நான் ஆமோதித்திருக்கிறேன் என்று சொன்னார்கள்.

5-வதாக பி. எஸ். பாண்டிய நாடார் அவர்கள் இந்த மனுவை அவரவர்கள் சொந்தத்தீர்மானத்தில்செய்யவேண்டுமே தவிரசேம்பர்வழியாகவரவேண்டாமென்று சொன்னார்கள் 6-வதாக எம். எம். எஸ். எம். துரையப்ப நாடார் அவர்கள் வர்த்தகக் குமாஸ்தாக்கள் எல்லோரும் ஞாயிற்றுக்கிழமை ரஜா ,கொடுக்காவிட்டால் மற்ற நாள் ரஜா கேளாமல் இருப்பார்களா என்று சொன்னார்கள். கடைசியாக இந்த மனுவை எல்லா வியாபாரிகளும் வந்து தீர்மானிக்க வேண்டிய திருப்பதால் இதை ஜெனரல் பாடி மீட்டிங்கிக்கு போடும்படி தீர்மானிக்கப்பட்டது.

தூத்துக்குடி வர்த்தக குமாஸ்தாக்கள்.

விவாக வயது மசோதா

ஆதரவுக் கூட்டம்

சென்ற 1-3-28 வியாழனன்று மாலை 5-மணிக்குக் காரைக்குடி ஆனந்தவல்லி சௌக்கத்தில் பார்ப்பனரல்லார் வாலிபர் சங்கத்தின் ஓர் பொதுக்கூட்டம் ஆவி. லெ. அருணசலம் செட்டியாரவர்கள் தலைமையில் கூடியது. அத்தருணம் சமீப ஊர்களிலிருந்தும் பல தனவந்தர்கள் விஜயம் செய்திருந்தனர்.

தலைவர் முகவுரையில் தற்போது இந்தியா சட்டசபையில் கொண்டு வந்துள்ள குழந்தைகள் மணம், விவாக வயது நிர்ணயம் சம்பந்தமான இருமசோதாக்களை ஆதரிக்கும் பொருட்டும் அதற்கு எதிரிடையாக அரசப்பிரதிநிதி அவர்கட்குக் காமகோடி பீடம் சங்கராச்சாரியாரவர்கள் விடுத்துள்ள அறிக்கையைக் கண்டிக்கும் பொருட்டும், கூட்டப்பட்டிருக்கிறதென்றும் இத்தகைய மசோதாக்கள் சமுதாய முன்னேற்றத்திற்கு இன்றியமையாததென்றும் கூறினர்.

பின்னர் திரு. பழ. நாராயணன்செட்டியாரவர்கள் "தமிழர் நிலை" என்னும் பொருள்பற்றி மிகவீரத்துடன் பேசினர்கள். அவர்கள் தம் சொற்பெருக்கில் பார்ப்பனர் கொடுமைகளை விளக்கி அவர்களை தலைகாட்டாது தடுக்கவேண்டுவது தமிழ் மக்கள் ஒவ்வொருவரின் கடமை என்று வற்புறுத்திக் கூறினர். இரண்டாவது திருவாளர் தி.ம. நடராஜ ஆச்சாரியவர்கள் "சுயமரியாதை இயக்கம்" என்னும் பொருள்பற்றி ஓர் அரிய சொற்பெருக்கு நிகழ்த்தினர்கள். அவர்தம் சொற்பொழிவினிடையே சுயமரியாதை இயக்கம் பார்ப்பனர்களை அழித்திட வேண்டுமென்ற நோக்கத்துடன் தோற்றப்பட்டதென்பது தவறென்றும் பார்ப்பனரல்லாதார் சுயமரியாதையைக் காப்பாற்றும் பொருட்டேதோன்றியுள்ளதென்றும் கூறினர். பிறப்பினுல் ஒருவன் மற்றொருவனைவிட மேலானவன் அவனுக்குரிய உரிமைகள் எனையோருக்குக் கிடைபாது என்பதைக் கண்டிப்பதேஇவ்வியக்கத்தின் தத்துவம்சுயமரியாதையற்ற நாட்டினரும் சமுதாயத்தினரு மேமுன்னேறியுள்ளார் என்றும்சுயமரியாதையற்ற ஜனசமூகத்தினர்உலகில்நிலைத்திருக்கும்தன்மையுடையரன்ரென்றுளன்றுள்ள விபரத்தை ஊர்கள் தோறும் சென்று பரவச் செய்து வருவதால்தான் சீன தேசத்தினர் முன்னேறி வருகின்றார்கள் என்றும் பலவாறு எடுத்துரைத்து சுயமரியாதை இயக்கத்தின் கொள்கையை நன்கு விளக்கினர்.

பின்னர் கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாய் நிறை வேற்றப்பட்டன.

1 இந்தியா சட்டசபையில் தற்போது கொண்டுவரப் பட்டிருக்கும் குழந்தைகள் மணம் விவாக வயது நிர்ணயம் சம்பந்தமான இரு மசோதாக்களையும் இக்கூட்டம் ஏகமனதாய் ஆதரிப்பதுடன் ஆடவர் விவாக வயதினை 21 ஆகவும் மகளிர் வயதை 16 ஆகவும் உயர்த்த வேண்டுமென்று சர்க்காருண்டிய கவர்மெண்டாரைக் கேட்டுக்கொள்ளுகிறது.

2 சென்னை சட்ட சபையில் தேவதாசிகள் பொட்டுக் கட்டுதலை ஒழித்திட மசோதா கொண்டு வந்ததற்கு ஸ்ரீமதி டாக்டர் முத்துலக்ஷ்மி அம்மாள் அவர்கட்கு இக்கூட்டம் பெரும் நன்றி பாராட்டுவதுடன் அம்மசோதாவை கூடிய சீக்கிரம் சட்ட மாக்கிட வேண்டு மென்றும் துரைத்தனத்தாரை வேண்டுகின்றது.

3 விவாக வயது சம்மந்தமாக இந்தியா சட்ட சபையில் கொண்டுவரப்பட்ட மசோதாக்களுக்கு எதிரிடையாகக் காமகோடி பீடம் சங்கராச்சாரியார் அவர்கள் அரசப்பிரதிநிதியவர்கட்கு விடுத்துள்ள அறிக்கையைப்பலமாகக்கண்டிப்பதுடன் அன்னர் வைதீக ஹிந்துக்களனைவரின் சமயாசாரியரல்ல வென்பதையும் கவர்ன்மெண்டாருக்கு அறிவித்துக்கொள்ளுகிறது.

இத்தீர்மானங்கள் தலைவர்கள், திருவாளர்களான காத்தமுத்துப்பிள்ளை ராமகிருஷ்ண ஆச்சாரியார் என்பவர்களால் முறையே பிரேரேணை செய்யப்பட்டு திருவாளர்களான முரு அருணசலம் செட்டியார் பழநாராயணன் செட்டியார், பிச்சப் பாசுப்ரமணியன்செட்டியார்சுவாமி சிவப்பிரசாத் என்பவர்களால் அரியமேற்கோள்களுடன் ஆதரிக்கப்பட்டன,

தலைவர் அவர்களது உயரிய உணர்ச்சிப் பெற்ற முடிவுரையுடன் இக்கூட்டம் இன்று நிறைவு வெய்தியது.

வெ. இராமநாதன்
காரியதரிசி.

மதுரை.

நாயுடுவின் விபீஷணப் பிரசாரம்.

பால்யவிவாகம் சாஸ்திரசம்மதமாம்.

(நமது விசேஷ நிருபர்)

மார்ச்சு, 12—

இன்று காலை பெரிய தகரக்கொட்டகையில் 8-30-மணிக்கு ஓர் பொதுக்கூட்டம் நடந்தது. டாக்டர் வரதராஜுலு நாயுடு தற்கால ராஜிய நிலைமையைப்பற்றிப் பேசினர். டாக்டர் நாயுடு அரசியல் கமிஷனை பகிஷ்கரிக்கவேண்டுமென்றும் நாயக்கர் சர்க்காருக்காக பிரசாரம் செய்வதாயும் அதை ஜனங்கள் பொருட்படுத்தக்கூடாதென்றும் அரசியல் கமிஷனுக்கு ஆதரவு கொடுத்த முனிசிபல் கவுன்சிலர்கள் தாலூகா ஜில்லா போர்டு மெம்பர்களை அடுத்த எலெக்ஷனில்தோற்கடிக்க வேண்டுமென்றும் பேசி வைதீகத்தை ஒழிக்கவேண்டுமென்றும் பால்ய விவாகம் நாட்டிற்கு கேட்டைத்தருகிறதென்றும் கூறினர். கூட்டம் முழுவதும் திரு. ராமசாமி நாயகர் அவர்களை தூஷிப்பதற்காக பார்ப்பனர்களால் ஏவப்பட்டிருந்ததாகவே யிருந்தது. பகிஷ்காரம் பார்ப்பனர் சூழ்ச்சியில்லை யென்றும் ஹிந்து மதத்தை யாராலும் அழிக்க முடியாதென்றும் பேசினர். பின் விசுவநாத சாஸ்திரி யென்னும் காங்கிரஸ்காரர் வந்தனோபசாரம் சொல்வதாய் வந்து பால்ய விவாகம் சாஸ்திர சம்பந்த முடையதென்றும் அதனல் பிள்ளைகள் பலயீனப்படவில்லை யென்றும் காபி குடிப்பதினல் கெட்டுவிடுகிறார்களென்றும், பால்ய விவாகத்தைப்பற்றி காங்கிரஸ் பேசக்கூடாதென்றும் மதத்துக்கும் காங்கிரசுக்கும் யாதொரு சம்பந்தமு மில்லை யென்றும் தான் ஒரு வைதீகனென்றும் இருந்தாலும் கள்ளுக்கடை மறியலில் ஒரு வருடம் சிறைவாசம் சென்றதாகவும் எனவே புராதன வழக்கத்தை சட்ட மூலமாக அடக்க நினைப்பது கூடாதென்றும் சமாதானமாக சொல்ல வேண்டுமென்மென்றும் இவற்றை யாதரிக்கும் பெயர்கள் செத்துப்போய் விடுவார்களென்றும் மிகுந்த கோபாவேசத்தோடு பேசினர். உடனே டாக்டர் நாயுடு சிறைக்கு சென்றவர் வைதீகராகயிருக்கமுடியாதென்றும் அங்கு எவன் சாப்பிட்ட எச்சிலட்டியிலோ உணவு கொடுக்கப்படுகிறதென்றும் வைதீகர்கட்கு காங்கிரசில் இடமில்லை யென்றும் தனக்கு உடனே போகவேண்டிய அவசரமிருப்பதால்நான் மறுபடி மதுரை வரும்போது அவருக்கு விவரமாக பதில் கூறுவதாயும் சொன்னர். ஷெ விசுவநாத சாஸ்திரியார் பிராமணரல்லாத மக்களை திட்டும்போது மாத்திரம் தாமும் சேர்ந்துகொண்டு கதறுவதும் தம்முடைய அயோக்யத்தனத்தை கூறினல் சண்டையிடுவதும் என்ன யோக்யதை என்பதை யோசியுங்கள். வைதீகரென்று சொல்லும் விசுவநாத சாஸ்திரியார் தீண்டாமையை எவ்வளவு தூரம் ஒழித்திருக்கிறாரென்பதைப் பாருங்கள்.

கத்தர் போர்டு சத்தியாக்ரகம்

ஓர் வேண்டுகோள்.

கத்தர் போர்டு சத்தியாக்ரகத்தைப்பற்றி விவாதிக்க நாளது வப்ரல் மாதம் 28 29தேதிகளில் திருச்சியில்மகாநாடுநடைபெறப்போவதாகத் தெரிகிறது. நமது பிராமணரல்லாதார் சுயமரியாதையைக் கப்பாற்ற சத்தியாக்கிரகத்தை துடங்க வேண்டுவது அவசியமென்பதை எல்லா இளைஞர்கட்கும் ஞாபகமூட்டுகிறேன். எனவே கத்தர்போர்டு மாத்திரம் சத்தியாக்கிரகம் செய்ய ஆரம்பிக்கப்போவதைக்காட்டிலும் சுயமரியாதையை நிலைநிறுத்துவான் பொருட்டு எந்தெந்த துறைகளில் பிராமணரல்லாதாரை இன்னல் படுத்திக் கொண்டிருக்கும் வழிகளையும் தகர்த்தெரிய சுயமரியாதைப்போரைத் துடங்குதல் நலமென நினைக்கிறேன் ஆகவே சென்னைமாகாண சுயமரியாதை சத்திபாக்ரகிகள் மகாநாட்டை எல்லோருக்கும் சௌகர்யமான திருச்சியிலேயே மேற்கண்ட தேதிகளில்நடத்த முயன்றல் சௌகர்யமாயிருக்கு மென்பது எனது தாழ்ந்த அபிப்பிராயம் இளைஞர்கட்கு வழிகாட்டும் தலைவர் வரவேற்புக்கழகத் தலைவரைக் கொண்டு மகாநாடு நடத்த திருச்சி சுயமரியாதை இளைஞர்கள் முன்னுக்கு வருவார்களென்று நம்புகிறேன்.

ஏ எஸ் அருணசலம்

போர்ட் ஜெயின்ட் ஜார்ஜ் கெஜட்.

(13—3—1928)

பொது இலாகா.

திரு.சி. காட்டரில் சி.ஐ.இ. ஐ.சி.எஸ் ரெவினியூ போர்டு 3வது மெம்பராக விருக்க உத்தரவு.

திரு. சி. டபிள்யூ. இ. காட்டன் ஐ. சி. எஸ். அரசாங்கத்தின் இரண்டாவது காரியதரிசியாகவிருக்க உத்தரவு.

திரு. ஏ. வித்தல்பால் ஐ.சி.எஸ். அவர்கள் தம் பயிற்சி முடிந்ததும் மலபார் ஜில்லா பாலக்காடு டிவிஷன் சப்கலெக்டராகவும் ஜாயிண்ட் மாஜிஸ்டிரேட்டாகவுமிருக்க உத்தரவு.

திரு. பி. சந்திரசேகர மேனன் ஐ.சி. எஸ். சேர்மாதேவி சப்கலெக்டராக விருக்க உத்தரவு.

மதனப்பள்ளி சப்கலெக்டர் திரு. எப்.ஆர். பிரிஸ்லி ஐ.சி.எஸ். சித்தூர் கலெக்டராக மாற்றம்.

பத்திரப் பதிவு இலாகா.

கிருஷ்ண ஜில்லா ரிஜிஸ்டிரார் திரு. பி. நரசிங்கராவ் நாயுடுகாரு கடப்பை ஜில்லா ரிஜிஸ்டிராராக மாற்றப்பட்டிருக்கின்றார்.

கடப்பை ஜில்லா ஆக்டிங் ரிஜிஸ்டிராராக விருக்கும் திரு. ஜே. கே. சுப்பராய அய்யர் கிருஷ்ண ஜில்லா ரிஜிஸ்டிராராக மாற்றம்.

வட ஆற்காடு ஜில்லா ரிஜிஸ்டிரார் திரு. பி. பெரியசாமி முதலியார் மேற்கு கோதாவரி ஜில்லா ரிஜிஸ்டிராராக மாற்றம்.

மேற்கு கோதாவரி ஜில்லா ரிஜிஸ்டிரார் எம். தங்கவேலு முதலியார் வடஆற்காடு ஜில்லா ரிஜிஸ்டிராராக மாற்றம்.

ஸ்தலஸ்தாபன இலாகா.

மேஜர் எப். ஜே.அண்டர்சன் ஐ. எம். எஸ். விசாகப்பட்டணம் வைத்திய கலாசாலை பிரின்ஸ்பாலாக வேலை பார்க்க நியமனம்.

திரு. பி. திருமலைராவ்காரு விசாகப்பட்டணம் வைத்திய கலாசாலையில் போதகாசிரியராக நியமனம்.

பொள்ளாச்சி டிவிஷனல் ஆபீசர் திரு. கே.இராம வர்மராஜா பொள்ளாச்சிமுனிசிபல் கௌன்சில் சேர்மனக நியமனம்.

செய்யது மகாபூப் சாகிப் பகதாரும் திரு. சிந்தல லட்சுமி நரசிம்மரெட்டியும் கடப்பை ஜில்லா போர்டு அங்கத்தினர்களாக அரசாங்கத்தாரால் நியமிக்கப்பட்டிருக்கின்றனர்.

கல்வி இலாகா.

1920ம் வருட சென்னை சிறுவர்கள் ஆக்டின்படி ஸ்ரீமதி மாட்ஹாம் ஸ்டான் போர்டு அம்மையார் செர்ட்டிபைட் பாடசாலைகளின் இன்ஸ்பெக்டர்களாக நியமனம்.

ஆந்திரா யூனிவர்ஸிட்டி புரோசான்சலர் பதவியை பித்தாபுரம் இராஜா ராஜினாமா செய்ததை சான்சலர் அங்கீகரித்து விட்டார்.

சைதாப்பேட்டை உபாத்தியாயர்கள் போதனுமுறை கலாசாலை உபாத்யாசகர் திரு. பி. கே. அநந்த நாராயண அய்யர் அதே கலாசாலையில் வைஸ் பிரின்ஸ்பாலாகவிருக்க உத்தரவு.

கலால் இலாகா.

ராணிப்பெட்டை இன்ஸ்பெக்டர் திரு. ஏ. ஏ. கொன்னருக்கு மார்ச்சு மாதம் 10-ந் தேதி முதல் 3 மாதம் ரஜா.

மல்லாபுரம் சர்க்கிள் உதவி இன்ஸ்பெக்டர் திரு. டி. என். சேஷ அய்யர் காசர்கோடு சர்க்கிள் இன்ஸ்பெக்டராக மாற்றம்.

காசர்கோடு சர்க்கிள் இன்ஸ்பெக்டராகவிருக்கும் திரு. கே. கங்காதரராவ் நாயுடு அவர்கள் ஆரணி சர்க்கிளுக்கு மாற்றம்.

வைத்திய இலாகா.

முகம்மது அப்துல்கலீக் சாகிப் பகதூர் எல். எம். எஸ். அவர்கள் ருடியாத்தம் ஆஸ்பத்திரிக்கு மாற்றம்.

ராயபுரம் வைத்திய பாடசாலை உதவி சூப்பரின்டெண்டெண்டு ராவ்சாகேப் எஸ். வெங்கட்டசுப்பாராவுக்கு 1928-ம் வருஷம் மே மாதம் 10-ந் தேதியிலிருந்து 3 மாதம் ரஜா.

சென்னை கவர்ன்மெண்டு ஜெனரல் ஆஸ்பத்திரியில் அவுட்பேஷண்டு டிபார்ட்மெண்டிலிருக்கும் திரு. சி. இராகவாச்சாரியார் திரு. ஆர். வி. ராஜம் வரும் வரையிலும் தற்காலீகமாக வைத்திய கலாசாலை உதவி உபாத்தியாசகராக வேலைபார்க்க மாற்றம்.

திரு. எஸ். இராஜகோபால் நாயுடு, பி. ஏ. எம். பி. பி. எஸ். அவர்கள் கான் பகதூர் முகம்மது அஜீசுல்லா சாகேப் பகதூருக்குப்பதிலாக அரசாங்க ரசாயன பரிசோதகருக்கு முதலாவது அசிஸ்டெண்டாக மாற்றப்பட்டிருக்கின்றார்.

வியாபார விஷயங்கள்.

(15—3—28)

நாணய மாற்றல்.

	விற்கிற விலை.	வாங்குகிற விலை
லண்டன் மேல் தந்தி		17 31/32 பெ
லண்டன் மேல் தரிசனம்	17 31/32 பெ	18 1/8 பெ
லண்டன் மேல் 3-மாத தவணை உண்டி		18 3/32 பெ
லண்டன் மேல் 6-மாத தவணை உண்டி		18 9/16 பெ

பிரான்ஸு மேல் தரிசனம்—
ரூ. 100க்கு 920 ப்ராங்
அமெரிக்காமேல் தரிசனம்—
100 பொன்டாவருக்கு ரூ 275 ரூ 270
பினங், சிங்கப்பூர் மேல் தரிசனம்—
100 டாலருக்கு ரூ. 156 ரூ. 150
ஹாங்காங் மேல் தந்தி அல்லது தரிசனம்—
100 டாலருக்கு ரூ. 145
ஷாங்காய் மேல் தந்தி அல்லது தரிசனம்—
100 டயிலுக்கு ரூ. 175.
ஜப்பான் மேல் தந்தி அல்லது தரிசனம் 100 யென்னுக்கு ரூ. 130
ஜப்பான் மேல் 60 நாள் டி. பி.
100 யென்னுக்கு ரூ. 124
ஜாவாமேல் தந்தி அல்லது தரிசனம்
ரூ. 100க்கு 89 கில்டர் 92 கில்டர்
இம்பீரியல் பாங்க் ஆப் இந்தியா நடப்பு வட்டி— 7o/o
பாங்க் ஆப் இங்கிலாந்து வட்டி 4 o/o

சர்க்கார் பத்திரங்கள்

3 o/o இந்தியா சர்க்கார் பத்திரம்
ரூ 75- முதல் ரூ 76-
4o/o கடன் (1960-70)
ரூ 87-6 ரூ 88-6
5o/o யுத்தக் கடன் (1929-47)
ரூ 99-14 ரூ 100-14
5o/o கடன் (1945-55)
ரூ 105-13 முதல் 106-13
5o/o இந்தியா சர்க்கார் 1933
ரூ 101-14 முதல் ரூ 102-14
5½o/o யுத்த பாண்டுகள் 1928
ரூ 104-11 முதல் ரூ 105-11
6/o/ 1930
ரூ 102-10 ரூ 103-10
6o/o இந்தியா சர்க்கார் பாண்டுகள்
1931 ரூ 103-14 ரூ 104-14
6o/oகடன் 1932
ரூ 105-6 ரூ 106-6
6 o/oமைசூர் சர்க்கார் கடன் (1940)
ரூ 113 முதல் 114
61/2o/oமைசூர் சர்க்கார் கடன்
(1941-51) ரூ 113 ரூ 114
7o/oமைசூர் சர்க்கார் கடன்
(1931) ரூ 107 ரூ 108
இம்பீரியல் பாங்கி
ஆப் இந்தியா (ரூ 500)
ரூ 1440 முதல் ரூ 1450
இம்பீரியல் பாங்கி
ஆப் இந்தியா (ரூ 125)
ரூ 345 முதல் ரூ 350

Printed and Published by J. S. Kannappar for the S. I. P. Association at the "Justice" Printing Works 14th Mount Road, Madras.